கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும். 5 - APR 1932

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 5] 1932 வரு மார்ச்சு மீ 17உ [No. 11

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 201
2. அப்பர் (64 கலை—தர்க்கம்) E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 203
3. குன்றுடையானும் மக்களும் W.V. கோவிந்தசாமி ராஜு BA.,LT. 205
4. மதிப்புரை—"நூற்பொருட் குறிப்பு" "சம்பந்தன்" 207
5. ஜூலியஸ் ஸீஸர் (அங்கம் 2. களம் 2.) ஷேக்ஸ்பியர் நாடகம் 208
6. தமிழ்ப்பாடம் நளவெண்பா - சுயம்வரகாண்டம் 209
7. தினகர வெண்பா (நூற்பொருள் அகராதி) S. வையாபுரிப்பிள்ளை B.A. B.L. 212
8. கம்பராமாயணம் (ஜடாயுகாண் படலம்) T. N. சேஷாசலம் B.A. B.L. 213
9. வர்த்தமானம் 219

க லா நி ல ய ம்

வித்தகமோ விதிவசமோ. 3.

இலக்கணம் ஈதென்றியம்பி வரையறுத் துரைக்க மாட்டாத் தன்மையதாயினும், அவ் வித்தகம்என்னுஞ்சொல் விளக்கவல்லவற்றை இன்னுஞ் சற்றுத் தொடர்வோம்.

தன்னையே தான் அறிந்துகொண்டஒருவனைவித்தகனென்று அழைப்பர். இது பிழையன்றெனினும் முற்றமுடிந்தஉண்மையுமன்று. ஏனெனில், நம்முடைய இருக்கையைப்பற்றிய நிச்சயஉணர்வை நாம் எய்தியவுடன் இவ்வுணர்விற்கு மப்பாலாய ஆழத்தில் கிடக்கின்றது வித்தகம் என்னத் தெரிந்துகொள்கின்றோம். ஆதலின், அறிவின்வேகம்வேறு, வித்தகத்தின் ஆழம்வேறு. தன்னறிவில்லாமை முழுமூடம் ; அதினின்றுந் திருத்தலைச் சிற்றறி வென்றும், அதற்குந்தான் அப்பாலாய வித்தகத்தைப் பேரறிவென்றும், ஒருவாறு இக்கட்டுரையின் நிமித்தம் வகைப்படுத்தி அழைக்கலாம்.

தன்னறிவின் ஆழத்தில் நிகழ்வது வித்தகம் என்று கூறினோம். இக் கருத்தை நன்கு தேர்தல்வேண்டும். "அறிதோறும் அறியாமை கண்டற்று" என்னுமத்திப் பியச் சூத்திரமித் தன்னறிவின் திறத்திலும் செல்லும். பொதுவாக, மனிதருக்குத் தம் வாழ்வில் நிலைத்த மிழ்ந்த நினைவில்லை; மேலெழுந்த பரப்பிலேயே மிதக்கின்றார்களென்னலாம். இன்னபிறப்பு, இன்னபெயர், இன்னதொழில், இன்னவிலாசம், இவ்வளவு பணம், இத்தனை மக்கள், இதுவயது, என்று இவ்வகைப் பல புறப்பொருள்களைச் சார்ந்துதான் மனிதன் தன்னை நினைத்துக்தொன்[illegible]முடையவனேயல்லாமல், அடைமொழி யாதுமின்றி "நான் இருக்கின்றேன்', எ[illegible]மொரு நிரந்தரஉள்ளெண்ணம்[illegible]ந்தெழவாம்பவர் மிகச் சிலரேயாகின்றனர். மற்றவைகளுடன் சார்த்தியே தன்னை மனத்துட்கொள்ளுமவ் வியல்பினைத் தன்னினைவு என்றும், அவைகளைச் சாராமல், தான் இருக்கின்ற தன்மையைமட்டும் சிந்தையாற்றெளிந்து அத்தெளிவிற்கேற்ப நிலைநிற்றலைத் தன்னறிவுஎன்றும் வேறு பிரித்துணர்ந்தக்கால் விடயம் விளங்குவது பலபடி எளியதாகும். தன்னினைவு என்பது Self - conceit எனவும், தன்னறிவு என்பது Self-knowledge எனவும் ஆங்கிலத்தொடர்களால் குறிக்கப்படும். எப்படித் தன்னினைவுதான் தன்னறிவு ஆகாதோ, அவ்வாறே, தன்னறிவுதானும் வித்தகம் Wisdom ஆவதில்லை. ஆயினும் இம்மூன்றிற்கும் ஓர் தொடர்புளது. நோயினாலேனும், சித்தப்பிரமை பித்தம் முதலியவைகளாலேனும் தன்னினைவு பெறலாற்ரு ஒருவனுக்குத் தன்னறிவு தோன்றுமாறு மில்லை. அங்ஙனமே, தன்னறிவு தோன்ருக்கால் வித்தகம் சுரப்பதற்கும் இடமில்லாமற் போகின்றது. ஆதலாற்ருன், தன்னறிவினழத்தில் திகழ்வதே வித்தகம் என்னலானோம்.

இதனையே, தன்னறிவின் வளர்ச்சியே வித்தகத்தில் கொண்டு சேர்க்கின்றது, என்ருலும் ஏற்றதாகும். தன்னறிவு பெற்றவளவிலேயே நின்றுவிடுவதால் எய்தும் பயன் பெரிதொன்று மில்லை. 'நான் இருக்கின்றேன் என்னுந் தனியறிவு வளரவளர, அவ் வறிவினைக்கொண்டு துருவி ஆராயப் பயிலுமிடத்துத் தன்னுடைய தன்மையின் மெய்ம்மை தெரியமாட்டாவோர் அறியாமை மெல்லமெல்லப் படர்ந்து அவ்வறிவைச் சூழ்ந்து கொள்ளத் தலைப்படுவது விலக்கரிய வரன்முறையாகி விடுகின்றது. ஆதலின், தன்னறிவின் முக்கியமான

இலாபம் யாதெனின், அதுதான், தன்னினும் உயர்ந்ததோர் பருப்பதமனைய அறியாமையின் உன்னத சிகரத்திற்கு நம்மை ஆற்றுப்படுத்துவதே யன்றிப் பிறிதொன்றில்லை. அவ் வறியாமையின் சிகரத்தின தகத்தே மெய்யாய வித்தகத்தின் தூயதண் ஊற்றுக்கள் பொங்கிப் பெருகிப் பொலிகின்றன. தன்னறிவு என்பது சிற்றறிவேயாக, அவ்வறிவுகொண்டு தெளிந்த அறியாமையே வித்தகம் என்னும் அம் மெய்யாய பேரறிவாகிவிடுகின்றது. வாய்மைக்கிணங்கி வாதிக்க வல்லார்முன், அறியாமையையே அறிவென்றழைக்கும் இவ்வாசகத்தில் அமைந்துள்ளதுபோல் தோன்றும் முரண், கணமேனும் நில்லாமல் அழிந்துபோம் - விப்ரீதம் யாதும் இல்லாமை விளங்கவரும்.

எனின், முழுமூடமும் முற்றிய அறிவும், இறுதியில் அறியாமை என்னும் அவ்வொன்றில் ஒக்கமுடிகின்றனவே; அறியாமையே நமது பிறப்பியல்பும் பெறவல்ல உரிமையும் ஆயின் அதனை இப்படிச் சுற்றிவளைத்துத் தொடுவானேன், என்ற ஐயம் எவர்க்குமே எளிதிற் றோன்றலாமெனினும் அவ்வளவு எளிதிலே அதற்கு ஆளாகவுங்கூடாது. முதல் இருந்த அறியாமைக்கும் பின்விளைந்த அறியாமைக்கும், இருளிற்கும் ஒளியிற்கும் இடையே யுள்ளதோர் வேற்றுமை யுளது. பாமரனொருவனுந் தன்னையறியான், பரிணதன் ஒருவனுந் தன்னையறியான், உண்மையே. எனினும், பாமரனோ தன்னை அறிந்துகொள்ளும்வகை நாடவேண்டும் என்பதுவும் அறியானாக, பரிணதனோ தன்னுடைய தன்மையை அறியவல்லேனல்லேன் என்பதை அறிந்தவனாவான். முன்னைய அறியாமை சிற்றறிவிற்குள்ளடங்கியது, பின்னறியாமையோ அச் சிற்றறிவிற்கு அப்பாலாயது. மன்பதைத்தொகுதியிற் பெரும்பகுதியோர் இவ் வெல்லையைக் கடத்தலென்பது மிகவும் அரியதே; மற்று, "மெய்யறிவின்பால் மனம்வைத்த மேன்மையோர் இவ் வரம்பைக் கடப்பதற்குரிய புதிய வழிகளை இடைவிடாது முனைந்து தேடுபவராவார். ஒருவன், மெய்யன்புபூண்டொழுகும் நெறியினால் மனிதர் எய்தவல்ல தன்னறிவின் முழுமையையும் எய்திவிடுவானாயின், பிறகு, அறியாமையின் புதியதோர் ஒளிபெற்று அவ்வன்பு விளங்குவதாகும். சாதாரண அன்பினைச் சூழ்ந்து இருட்டும் அறியாமையின் இது முற்றிலும் வேறாயது. இப் பின்னைய அறியாமை மிருகத்தினைச் சூழ்ந்து தழுவிக்கொள்ளும் பெற்றியது; முன்னையதோ கடவுளிற்கருகே நம்மை அழைத்துக் கொண்டுபோய் விடும். என்றென்றும் பாமரனேனும் பரிணதனேனும் எவ்வெவரும் அறியாமையிற்றானே உறையவேண்டியவர்கள் என்பது நிச்சயம்; இதிலோர் சந்தேகமில்லை; அறிஞரென்ற பெயரிற் குரியவர்களெல்லாரும், கிரேக்கதேய ஸாக்ரடீஸ் போலவும், உரோம மன்னவன் மார்க்கஸ் அரீலியஸ் போலவும், அறிதோறும் அறியாமை காண்பதே உலகறி கொள்கையென உவமையாய்க்கொண்ட நம் மாதாநுபங்கிபோலவும், "யாம் அறியேம், யாம் அறியேம்" என எதிர்முறையிட்டு விளம்புவார். நூலனைத்தும் நுனித்துணர்ந்த நிடததேயத்தவர்களும், வரிவளையார்தங்கள் மருங்கேயன்றியும் தமக்குத் தெரியாதன சில உளவென்பதை மறுக்கமாட்டார்; புகழேந்திப்புலவரே அதைமறைத்துவிட்டார். இன்னணம் எத்திறத்தினும் நாம் அறியாமையாற்றான் சூழப்பெற்றிருக்கின்றோமாயினும், அவ்வறியாமையை அறிந்துகொள்ளும் நலத்தினால் அதனை மேன்மேலும் தூய்மைபெறச் செய்கின்றவர்களாகின்றோம். இத் தூய்மையின்பால் நம்மைத் தூண்டுகின்ற அந்நன்னிலை வித்தகத்தின் விளக்கமாம்.

முன்னின்ற அறியாமை மூடமென்றும், அம்மூடமழிய வளர்கின்ற தன்னறிவு சிற்றறிவென்றும், அத் தன்னறிவின் வளர்ச்சியால் பின்வந்தெய்துகின்ற அறியாமையே வித்தகமென்னும் பேரறிவென்றும் இதுகாறும் விளக்கிக்காட்டினோம். இதனிடையே, பகுத்தறிவென்னும் மற்றொருவகை அறிவினிடத்தும் நம் சோதனையை இப்பொழுது செலுத்தவேண்டி வருகின்றது. பகுத்தறிவு என்னும் இதனை ஆங்கிலத்தில் reason என்னுஞ்சொல் குறிக்கும்.

கண்டதே காட்சியெனப் புலன்கள் புகட்டும் அறிவைக்கடந்து எப்பொருட்கும் மெய்ப்பொருள் காண்பதற்கு உதவிசெய்கிற கருவியா யமைவது பகுத்தறிவு. "சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ, நன்றின்பா லுய்ப்ப தறிவு" என்ற விடத்து வள்ளுவனார் இப் பகுத்தறிவையே மனத்துள்வைத்துப் பேசுகின்றார். புலன்வழி மனத்தைச் செல்லவிடாது, நல்லதுந் தீதுமோர்ந்து நன்மையின்பாற் செலுத்துவது பகுத்தறிவின் இலக்கணமும் காரியமுமாகும். புலன்கள் தூண்டும் புல்லிய நினைவுகளை வெல்வான் பகுத்தறிவுடையவன். ஒன்றன் குணநாடிக் குற்றமுநாடி அவற்றுள் மிகைநாடி மிக்கொளலும் பகுத்தறிவின்பாற் பட்டது. உற்றதுகொண்டு மேல்வந்து உறுபொருள் உணரும் கொள்கையும் அது. எனினும் இவைதாமே வித்தகம் ஆகா. புலன்களின் தூண்டல்களின்மீது இடைவிடாது கொள்கின்ற வெற்றியினும் மேலானதோர் நிலையாம் வித்தகம். இத்தகைய பகுத்தறிவினோடு நின்றக்கால் நிலைக்கும்பயன் யாதுமில்லை. ஆதலின் பகுத்தறிவை மட்டுமே நாம் ஆராதித்திருப்பதால் வித்தகநன்னிலை அடைந்தவராக மாட்டோம். இதனை, மாரிஸ் மேடர்லிங்க் என்பவர்,

> " We shall not become wise through worshipping reason alone; and wisdom means more than perpetual triumph over inferior instincts. Such triumphs can help us but little if our reason be not taught thereby to offer profoundest submission to another and different instinct that of the soul. These triumphs are precious, because they reveal the presence of diviner instinct, that grows ever diviner still. And their aim is not in themselves; they serve but to clear the way for the destiny of the soul, which is a destiny always, of purification and light.

என விளக்குகின்ற வாக்கியங்கள் மிகவும் அருமையாய் அமைந்திருக்கின்றன. புலன்களின் வெற்றியோடு நிற்கின்ற பகுத்தறிவினாற் பயன்தா னில்லையென்று யாம் இயம்பியதற்கு ஆதாரமாவதுடன் அது, மேற்சென்று அடையவேண்டிய அறியாமையாகிய அவ் வித்தகத்தின் காரியத்தையும் ஒருவாறுகுறித்தலால் இம்மேனாட்டறிஞர் மொழியினை இங்கெடுத்தெழுதினோம். வித்தகத்தை, மெய்யுணர்வு என்னுந் தொடரால் குறிக்கின்ற திருவள்ளுவர், புலன்களை வென்றுகொண்ட வெற்றியிற் பயனில்லை என்பதை,

" ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லாத வர்க்கு "

என இயம்பியுளகுறளை [illegible]ஸ் மேடர்லிங்க் கொண்ட[illegible] தக்கீத்த [illegible]யம் பலபடி. வலி[illegible]தாகும்.

அப்பரும் அறுபத்துநான்கு கலைகளும்—29. தருக்கம்

[187-வது பக்கத் தொடர்ச்சி]

2. அநுமானப் பிரமாணம்.

கமகம்—சாதகம்

புகையுடைமை, தீயுடைமையை ஞாபகப்படுத்துவதால் அதைக் "கமகம்" என்பர். இதற்கு உதாரணம் அப்பரது திருவிழிமிழலைத் திருத்தாண்டகத்திற் சில பாசுரங்களில் காணலாம்:—

நீறுடைய திருமேனி பாக முண்டோ
நெற்றிமே லொற்றைக்கண் முற்று முண்டோ
கூறுடைய கொடுமழுவாள் கையி லுண்டோ
கொல்புலித்தோ லுடையுண்டோ கொண்டவேடம்
ஆறுடைய சடையுண்டோ வரவ முண்டோ
வதனருகே பிறையுண்டோ வளவி லாத
ஏறுடைய கொடியுண்டோ விலய முண்டோ
வெவ்வகையெம் பிரானைக் கண்ட வாறே!

திருவிழிமிழலைத் திருத்தாண்டகம் 5.

புகையுடைமை, தீயுடைமையினது ஏது, அதாவது சாதகமாம். கறைமிடற்றண்ணல், தேவர்கள் யாவரையும் அழிக்கவெழுந்த விடத்தை யுட்கொண்டு, அமுதம் ஈந்தாராதலால், அவர், உலகத்துத் துன்பங்களைத் தான் பிச்சை மூலமாயாகிலும் ஏற்று மறையொலியை உலகத்தில் நிறுவுந் தன்மையவர். அத்தொழிலைச் சிவபெருமானுக்குச் சாதகமாய்க் காட்ட அப்பர் ஆங்காங்குப் பாடியது காண்க:—

மறையது பாடிப் பிச்சைக் கென்றகந் திரிந்து வாழ்வார்
பிறையது சடைமு டிமேற் பெய்வளை யாட னோடும்
கறையது கண்டங் கொண்டார் காஞ்சிமா நகர்த னுள்ளார்
இறையவர் பாட லாட லிலங்குமேற் றளிய னாரே.

திருக்கச்சி மேற்றளி - திருக்குறுந்தொகை 1.

பக்கம்—சபக்கம்—விபக்கம் :

இத் தருக்கவாய்பாடுகள் மாணவர்கள் அறியவேண்டுவதான மொழிகளாம்.

பக்கமாவது:-ஐயமுடைய சாத்திய தருமத்தையுடைய தருமி. புகை மலையினின்று எழுவதைக் காண்பது பிரத்தியட்சப் பிரமாணம். மலையில் தீயுண்டோவென்பது ஐயம். இவ்வையமாகிய சாத்தியதருமத்தை மலை பெறுவதால், இதைப் பக்கம் என்பர். காலன் வீழ உதைத்த செங்கமலச் சேவடிகளை நாம் காண்கின்றோமெனின், பிறவியைத் தீர்ப்பதாகிய ஐயமுடைய சாத்தியதருமத்தையுடைய தருமி அத் தாள்களாகுமாதலின், அவற்றைப் பக்கம் என்னலாம்.

தாளுடைச் செங்கமலத் தடங்கொள்சே வடியர் போலும்
நாளுடைக் காலன் வீழ வுதைசெய்த நம்பர் போலும்
கோளுடைப் பிறவி தீர்ப்பார் குளிர்பொழிற் பழனை மேய
ஆளுடை யண்ணல் போலு மாலங்காட் டடிக ளாரே.

திருவாலங்காடு - திருநேரிசை 7.

சபக்கமாவது:—நிச்சயிக்கப்பட்ட சாத்திய தருமத்தையுடைய ஒரு தருமி. புகை யநுமானத்தின்கண் சமையலறை சபக்கம். இது ஏது சாத்தியத்தின் உடனிகழ்ச்சிக்கு உதாரணமாவது. சிவபெருமான் இன்பமயமாதலால், எப்பெருமான் இன்பவடிவமாய்க் காணப்படுகின்றானோ, அவன் சிவனென்பது சபக்கமாயும், அதனை உதாரணமாகக்கொண்டு ஆங்காங்குச் சிவஸ்தலங்களில் காணும் பரம்பொருளின் உண்மையை இன்பவடிவால் நிச்சயித்தலும் கீழ்வரும் பாசுரங்களிலுணர்க:—

பந்த பாச மறுத்தெனை யாட்கொண்ட
மைந்த னைம்மண வாளனை மாமலர்
கந்த நீர்க்கடு வாய்க்கரைத் தென்புத்தூர்
எந்தை யீசனைக் கண்டினி தாயிற்றே. (6)

உம்ப ரானை யுருத்திர மூர்த்தியை
யம்ப ரானை யமலனை யாதியைக்
கம்பு நீர்க்கடு வாய்க்கரைத் தென்புத்தூர்
எம்பி ரானைக்கண் டின்பம தாயிற்றே. (7)

திருக்கடுவாய்க்கரைத் திருப்புத்தூர்-திருக்குறுந்தொகை

விபக்கம்:-இது நிச்சிதசாத்தியமில்லாத தருமி. மடுவில் தீயின்மைபோல். சாக்கியர் சமணர்கள்தம் கட்டுரைகள் இதற்கு உதாரணம் ஆகும் என்பதைத் திருஞானசம்பந்தர் தம் ஒவ்வொரு பத்தாம் பாசுரத்திலும் விளக்குவார்.

கடுக்கடின்று கழிமீன் கவர்வார் கண்மாசுடம்பினர்
இடுக்கணுய்ப்பாரவரெய்த வொண்ணுவிடமென்பரால்
அடுக்கநின்றவ்வறவுரைகள்கேட்டாங்கவர்வினைகளைக்
கெடுக்க நின்றபெருமானுறை கின்றகே தாரமே.

சம்பந்தர் - திருக்கேதாரம்

மேற்கண்ட விபக்கம் கேவலாந்நுவயி யனுமானத்தில் இல்லை; ஏனெனில் இவ்வநுமானத்தில் சாத்திய அபாவ, ஏது அபாவ உடனிகழ்ச்சிகளுக்கு யாதொரு உதாரணமும் கிடைப்பதில்லை யாதலின். அவ்வாறே கேவல வியதிரேகியில் சபக்க மின்மையாகும். ஏனெனில் அதில், ஏது சத்தியங்களின் உடனிகழ்ச்சிக்கு உதாரணம் ஓரிடத்திலும் கிடைப்பதின்றாதலால். எனவே கேவலாந்நுவயி, கேவல வியதிரேகி என்பனநான்கு ரூபங்களுடன் கூடியே தமது சாத்தியத்தைச் சாதிக்கும். முறையே, அவற்றில் விபக்கமும் சபக்கமு மின்மையால்.

இவ்வேதுக்களில் ரூபம் குறையுமாயின் ஏதுப்போலியென்று அவற்றைத் தருக்கத்தில் நீக்குவார்.

ஏதுக்களின் வகை *:—ஏதுகள் அந்நுவய வியதிரேகியென்றும், கேவாந்நுவயி யென்றும், கேவல வியதிரேகி யென்றும் மூன்று பகுதிகளா யெடுத்துக்காட்டி அவற்றின் வேறுபட்டன ஏதுப்போலிகளெனக் கண்டோமன்றோ? இம் மூவகை யேதுகளும் நால்வகைஉட்பிரிவினை யுடையனவாம். அவையாவன, இயல்பேது, காரியவேது, அநுபல(ப்)த்தியேது, காரணவேது என்பன. அவற்றுள்,

(i) இயல்பேது-சாத்தியத்தின் காரணமாவது அல்லது காரியமாவதுஇன்றி இயல்பாய்நிற்கும் ஏது இயல்

* ஏதுக்களாலு மெடுத்த மொழியாலு மிக்குச்
சோதிக்க வேண்டா சுடர்விட்டுள னெங்கள் சோதி
மா துக்க நீங்க லுறுவீர் மனம்பற்றி வாழ்மின்
சா திக்கண் மிக்கு ரிறையே வந்து சார்மின் [illegible]
[illegible]

பேதுவாகும். கடம் ஒரு திரவியம்; அது திரவியத்தன்மையால் என்னுங்காலை, திரவியத்தன்மையால் என்னும் ஏதுவானது, அதன் காரணமாகவாவது காரியமாகவாவதுஇன்றி இயல்பாயிருத்தலின் இயல்பேது என்பர். இவ்வாறு காரண காரியங்களுக்கு வேறாய இலிங்கமுடைய தன்மையை, கீழ்வருகின்ற பாசுரம் விளக்கும்:—

விண்ணாகி நிலனாகி விசும்பு மாகி
வேலைசூழ் ஞாலத்தார் விரும்புகின்ற
எண்ணாகி யெழுத்தாகி யியல்பு மாகி
யேழுலகுந் தொழுதேத்திக் காணநின்ற
கண்ணாகி மணியாகி காட்சி யாகிக்
காதலித்தங் கடியார்கள் பரவநின்ற
பண்ணாகி யின்னமுதாம் பாசூர் மேய
பரஞ்சுடரைக் கண்டடியே னுய்ந்தவாறே.

திருப்பாசூர் - திருத்தாண்டகம் 1.

(ii) காரியவேது:—காரியத்தை இலிங்கமாகவுடைய ஏது காரியவேதுவாம். நெல் விளைந்ததால் (நீர்நிலை நிறைய மழை பெய்திருக்கவேண்டும், ஆதலால்) மழை பெய்தது என்பதில் நெல்விளைவாகிய ஏது காரியவேது எனப்படும்:—

பொன்னார் திருவடிக் கொன்றுண்டு
விண்ணப்பம் போற்றிசெய்யும்
என்னாவி காப்பதற் கிச்சையுண்
டேலிருங் கூற்றகல
மின்னாரு மூவிலைச் சூலமென்
மேற்பொறி மேவுகொண்டல்
துன்னார் கடந்தையுட் டூங்கானை
மாடச் சுடர்க்கொழுந்தே.

திருத்தூங்கானைமாடம் - திருவிருத்தம் 1.

என்னும் பாசுரம் திருநாவுக்கரசு பாடியபோது அவர் தோளில் சூலமும் இடபமும்பொறித்த குறி "என்று கொண்ட" காரியவேதுவாகும்.

(iii) அநுபலப்தி ஏது—என்பது விளங்காமையான எதிர்மறைத்தன்மையால் மற்றொன்றினது அபாவம் உணர இடந்தருவது. பரமாணு காரியமாகாமையின் கர்த்தாவுடையதன்று என்பதில், காரியமாகாமை அநுபலப்திஏது வாகும். பஞ்சேந்திரிய அடக்கமின்மையால் பிறவி நீங்காமையும் துன்ப நீங்காமையும் உண்டென்பது.

சாற்றுவ ரைவர் வந்து சந்தித்த குடிமை வேண்டிக்
காற்றுவர் கனலப் பேசிக் கண்செவி மூக்கு வாயுள்
ஆற்றுவ ரலந்து போனே னாதியை யறிவொன்றின்றிக்
கூற்றுவர் வாயிற் பட்டேன் கோவல்வீ ரட்டனீரே (4)
தடுத்திலேனைவர் தம்மைத் தத்துவத் துயர்வு நீர்மைப்
படுத்திலேன் பரப்பு நோக்கிப் பன்மலர்ப் பாத முற்ற
அடுத்திலேன் சிந்தை யார வார்வலித் தன்பு திண்ணம்
கொடுத்திலேன் கொடிய வாநான் கோவல்வீ ரட்டனீரே(5)
பிச்சிலேன் பிறவிதன்னைப் பேதையேன் பிணக்க மென்னும்
துச்சனே யழுந்தி வீழ்ந்து துயரமே யிடும்பை தன்னுள்
அச்சனா யாதி மூர்த்திக் கன்பனாய் வாழ மாட்டேன்
கொச்சையேன் செய்வதென்னே கோவல்வீ ரட்டனீரே (8)

திருக்கோவலூர் வீரட்டம் - திருநேரிசை.

(iv) காரண ஏது:—இது அநுபலப்தி ஏதுவின் மற்றொரு சாயை. காரணமாகிய தீ யில்லாவிடத்துக் காரியமாகிய புகையின்றென்பது நியமமாயிருத்தலின், தீத் தோன்றாமையின் என்னும் அநுபலப்தி ஏது புகையின்மையைச் சாதித்தற்குக் காரணமாயுமிருத்தலின் காரணவேதுவாம். இடித்துமின்னி யிருண்டுமேகமெழுதலால் மழை பெய்யும் என்புழி, இடித்துமின்னி மேகமெழுதலால் என்பது மழைபெய்வதற்குக் காரணவேதுவாம்.

வையக முற்று மாமழை மறந்து
வயலி னீரிலை மாநிலந் தருகோம்
உய்யக் கொள்கமற் றெங்களை யென்ன
வொளிகொள் வெண்முகி லாய்ப்பரந் தெங்கும்
பெய்யு மாமழை பெருவெள்ளந் தவிர்த்துப்
பெயர்த்தும் பன்னிரு வேலிகொண் டருளும்
செய்கை கண்டுநின் றிருவடி யடைந்தேன்
செழும்பொ ழிற்றிரு புன்கூரு ளானே.

சுந்தரர் - திருப்புன்கூர் - பண் - தக்கேசி 2.

மற்றும்,

குறுவித்த வாகுற்ற நோய்வினை காட்டிக் குறுவித்தநோய்
உறுவித்த வாவுற்ற நோய்வினை தீர்ப்பா னுகந்தருளி
அறிவித்த வாறடி யேனையை யாற னடிமைக்கணே [னையே.
செறிவித்த வாதொண்ட னேனைத்தன் பொன்னடிக் கீழெ

திருவையாறு - திருவிருத்தம்

என்னும் அப்பர் பாசுரத்தாலு முணர்க.

அநுமானமும் அந்தக்கரணச் செய்கைகளும் :— முன்கண்ட அநுமானங்களில் மூவகை அந்தக்கரணச் செய்கைகள் உள. அவையே ஏதுக்களுக்கு ஒருவகை அடிப்படையாய் நிற்கும். அவையாவன, பூர்வ, காட்சி, கருதல், உரையில் அறிதல். அவற்றுள் பூர்வகாட்சி புகையுந்தீயும் ஓரிடத்துக்கண்டு அவ்விரண்டிற்கும் நியதமான உடனிகழ்ச்சியை யறிந்தவன் பின்னர் மலை முதலியவிடத்திற் புகையைக்கண்டு ஆண்டுப்புகையால் தீ யுண்டென வறிதல். இரக்கமற்ற காலதூதர் மனிதர் பலரை மாய்ப்பதுகண்டு மனிததேகம் அவ்வாறென்றுணர்தலும் பூர்வகாட்சியாகும்.

இரக்க முன்னறி யாதெழு தூதுவர்
பரக்க ழித்தவர் பற்றுதன் முன்னமே
அரக்க னுக்கருள் செய்தவாட் போக்கியார்
கரப்ப துங்கரப் பாரவர் தங்கட்கே.

திருவாட்போக்கி - திருக்குறுந்தொகை 10.

கருதலாவது, ஒருவன் கூறும் வார்த்தையால் அவனது அறிவினளவை யுணர்தல் கருதலாகும்:—

கடுகிய தேர்செலாது கயிலாய மீது
கருதேலுன் வீர மொழிநீ
முடுகுவ தன்று தன்ம மெனநின்று பாகன்
மொழிவானை நன்று முனியா
விடுவிடு வென்று சென்று விரைவுற் றரக்கன்
வரையுற் றெடுக்க முடிதோள்
நெடுநெடு விற்று வீழ விரலுற்ற பாத
நினைவுற்ற தென்றன் மனமே.

சிவனெனுமோசை 11.

உரையாலறிதலாவது, ஒருவனுக்கு உண்டாகின்ற ஹிதா ஹிதங்களைக்கண்டு அவற்றான் அவனது பூர்வவினையின் அளவைச் சாத்திரவாயிலாக வறிதல்.

வேறு சிந்தை யிலாதவர் தீவினை
கூறு செய்த குழக னுறைவிட
மேறு செல்வத் திமையவர் தாந்தொழு
மாறு சேர்கடம் பூர்க்கரக் கோயிலே.

திருக்கடம்பூர்க் கரக்கோயில் - திருக்குறுந்தொகை 4.

மனுதரும சாஸ்திரம், நாலடியார் முதலிய நூல்களில் இவ்வகை உரையநுமானத்திற்கு உதாரணங்கள் பல காணலாம். திருநாவுக்கரசர் சிவபெருமான் திருவருளை விளக்கும் பாசுரங்கள் பல இத்தகைய உரையாலறிதலென்னும் முறைபற்றி விளங்கும்.

இந்திர னோடு தேவ ரிருடிக ளேத்து கின்ற
சுந்தர மானார் போலுந் துதிக்கலாஞ் சோதி போலும்
சந்திர னோடு கங்கை யரவையுஞ் சடையுள் வைத்து
மந்திர மானார் போலு மாமறைக் காட னாரே! (1)

* * *

பிணியுடை யாக்கை தன்னைப் பிறப்பறுத் துய்ய வேண்டில்
பணியுடைத் தொழில்கள் பூண்டு பத்தர்கள் பற்றி னாலே
துணியுடை யரக்க னோடி யெடுத்தலுந் தோகை யஞ்ச
மணிமுடிப் பத்தி றுத்தார் மாமறைக் காட னாரே.

திருமறைக்காடு - திருநேரிசை.

இதுவரை அநுமானத்திற்கு ஆதாரமான ஏதுக்களி னிலக்கணம் கண்டோம். இனி ஏதுப்போலிகளை ஆராய்வோம்.

குன்றுடையானும் மக்களும்

[185-வது பக்கத் தொடர்ச்சி]

தாமரை கொதிப்புற்று, சேலையை விசிந்துகட்டிக் கதவைத் திறப்பதற்கு நாலடி எடுத்துவைத்தாள். சேவகர்கள் அவளை யணுகவொட்டாமல் பின்னே தள்ளினார்கள். தாமரை சேவகர்களைக் கையாற் புடைத்து, மீண்டும் கதவை நெருங்கினாள். சேவகர்கள் உயிருக்குப் பயந்து தாமரையின்கழுத்தில் கைபோட்டுத் தள்ளுதலும், சேவகர்களும் தாமரையின் ஆட்களும் கைகலந்தார்கள். தாமரை முன்னேறிக் கதவைத் திறக்க முயன்றாள். சேவகரிற் சிலர் அவளுடைய ஆட்களை நையப்புடைத்துத் துரத்தினர்; மற்றுஞ் சிலர் அவளை யணுகி, அவள் கையாலும் காலாலும் அடிக்க அடிக்க, அவளைப்பற்றிக் கயிறுகொண்டு கட்டி, வீதியில் தள்ளி வெய்யிலில் உருட்டினர்.

தாமரை தெருவிற் கிடந்து, 'ஐயோ! தெய்வமே! எனக்குத் துணைவர இங்கு ஒருவருமில்லையே. இந்த வெய்யிலிற்கிடந்து தீப்பட்ட புழுப்போலத் துடிக்கின்றேனே. என் சாந்தணியும் மேனியெல்லாம் சாக்காயம் ஆயிற்றே. என் புழுகணியும் கூந்தலெல்லாம் புழுதி படலாயிற்றே. தம்பிமார்களைக்கண்டு பேசலாம் என்று வந்தேனே. அந்தப் பாவிகள் கைவிட்டார்களே. அவர்களுக்கு நான் என்ன தீங்கு செய்தேன்? பெண்டுகள் வார்த்தைகேட்டு இப்படிச் செய்தார்களே. குழந்தைகளைக்கண்டு வாரியெடுத்து முத்தமிடலாமென்று வந்தேனே. மலட்டுப்பிணி சாடும் என்று மக்களை ஒளித்து வைத்தார்களே. ஈசா! நீயும் கைவிட்டனையோ? மலடி மலடி யென்று வையகம் ஏசுகின்றதே. நான் இனிப் பிள்ளை பெறேனோ? இந்தப் பழிக்குப்பழி வாங்கேனோ? என்னப்பா! உன்னை நம்பி நானிருக்கிறேன். கடைக்கண் பார். ஐயோ! நான் புறப்படும்போது என் மன்னர் தடுத்தாரே; அவர்வாக்குப் பலித்ததே. நான் இனித் திரும்பிப்போய் எந்த முகத்தோடு அவரைக் காண்பேன்?' என்று பலவாறுசொல்லிப் புலம்பினாள். அயலில் நின்றிருந்த ஆடவரும் பெண்டிரும் கண்ணீர் சொரிந்தனர்.

இன்னவாறு நெடுநேரம் கிடந்துபுலம்புந் தாமரை, தனக்கு உதவிபுரிய வருவார் ஒருவருமில்லை யென்பதுணர்ந்து, வெய்யிலின் கொடுமைக்கு ஆற்றாதவளாய், சேவகர்களை நோக்கி, 'நீங்கள் ஆணோடு பெண்ணோடு பிறக்கவில்லையா? ஒரு பெண்ணைக் கட்டியடித்து வீதியில் தள்ளினீர்களே, உங்களுக்குத்தான் சிறிதும் இரக்கமில்லையா? உங்களுக்கு இது தகுமா? அடா பாவிகளே, சுடுமணலிற் கிடந்து என் உடம்பெல்லாம் கொப்பளித்தது. நான் இனிப் பொறுக்கமாட்டேன். உங்களுக்குப் புண்ணியம். என்னை யவிழ்த்து விடுங்கள். இனி நான் உங்கள் சோலிக்கு வரவில்லை' என்று சொல்லிக் கையெடுத்துக் கும்பிட்டாள். சேவகர்கள் இரக்கமுற்றுக் கட்டவிழ்த்து அவளை விடுதலை செய்தார்கள்.

புழுதி படிந்த மேனியோடும், அவிழ்ந்து தொங்கிய கூந்தலோடும் தாமரை அழுதுகொண்டு, தாதியர் பின்தொடர, அவ்வூர்ப் பிள்ளையார் கோவிலை யடைந்து அத்தெய்வத்தின் முன்னிலையில் மண்டியிட்டு; 'ஏழை முறை கேளும், என்னப்பா! அருமைத் தம்பியர்களென்று அவர்களை நான் காணவந்தேன். பாதகர்கள் தம்மனைவியர் வார்த்தைகேட்டு எறிட்டுப்பார்க்கவில்லை, ஏனென்று கேட்கவுமில்லை. அக்காள் என்று சிறிதும் இரக்கங்கொள்ளவில்லை. ஆளைவிட்டு அடித்தார்கள்; அநியாயம் செய்தார்கள்; தம்மக்களை மறைத்தார்கள்; மலடியென்று சொன்னார்கள். இந்தப் பாவம் சும்மா போகுமா?" என்று சொல்லி எழுந்துநின்று; 'நானே ஓர் உத்தமியானால் இந்தப் பழிக்குப்பழிவாங்குவேன். நான்பத்தினியானால் என் வாக்குப் பலிக்கவேண்டும்; என் தம்பிமார்க்குப் பிறந்திருக்கும் இரண்டு பெண் குழந்தைகளுக்கும் ஈடாக நான் இரண்டு ஆண் பிள்ளைகளைப் பெற்று அவர்களுக்கு உரிமைக்கலியாணஞ்செய்வித்து, அப்பெண்களைக் கொண்டுபோய்ச் சிறைபோடுவேன்' என்று வஞ்சினங்கூறி, தம்பிமார் வீட்டை நோக்கி ஒரு கை மண்ணை வாரித் தூற்றினாள்.

பின்பு தாமரை, தன்னைச் சூழ்ந்துநின்ற கும்பலில் இருந்த மாடுமேய்க்குஞ் சிறுவர்கள் இருவரைத் தன் பக்கலுக்கு அழைத்துச், 'சிறுவர்களே, இந்த ஊரிலிருக்கும் கொற்றர்கள் நால்வரை அழைத்துவாருங்கள், உங்களுக்கு நல்ல வெகுமதிகொடுக்கிறேன்" என்றாள். அச்சிறுவர்கள் ஓடிப்போய்க் கொற்றர்களை அழைத்துக்கொண்டு வந்தார்கள். தாமரை, பத்துமுழ நீளமும் மூன்றுமுழ அகலமுங் கொண்ட ஒரு கல் கொண்டு வரும்படி அக் கொற்றர்களை ஏவி, அவர்கள் கல்லைக் கொண்டுவந்தபின், தனக்குக் கலியாணமானது முதல் தம்பிமார்கள் தன்னைத் தெருவிற்கிடத்தி யடித்ததும் தான் வஞ்சினங் கூறியதும் இறுதியாக உள்ள எல்லாச் செய்திகளையும் சுருக்கமாக அக்கல்லிற் கொத்துவித்து, பிள்ளையார் கோவிலுக்குமுன் அக்கல்லை நடுவித்தாள்; தான் கொண்டுவந்த பழங்களையும் பலகாரங்களையும் மாடுமேய்க்கும் அச்சிறுவர்களுக்கு வெகுமதி

யளித்தாள்; நகைகளைக் கொற்றர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்தாள்.

தாமரை தன்தாதியர்களையும் ஆட்களையும் அழைத்துக்கொண்டு தம்பிகளின் அரண்மனை வாசல்வழியாய் ஊருக்குப் போகையில், மதில்மீதேறிப் பார்த்துநின்ற பெரியதம்பியின் மனைவி அவளைப் பார்த்து, 'நீ மக்களைப்பெற்று எங்கள்பெண்மக்களை மணந்துகொண்டு போய்ச் சிறைபோடுவாயோ? மலடி மக்களைப்பெறுவது மெய்யானால், நான் உள்ளங்கையில் உழக்கரிசி சமைப்பேன்' என்று சொல்லி இகழ்ச்சிசெய்தாள்.

தாமரைநாச்சி, அரண்மனையைக் கடந்துபோனபின், தம்பிமாருடைய மனைவியர் அவள் போனதிசையிலே விரல்மடித்து 'அவள் நாசமாய்ப்போவாள்' என்று சொல்லி நெட்டையெடுத்து, வீட்டுக்குட் சென்று, மக்களை மூடிவைத்த மக்கிரியைத் திறத்தலும், உள்ளே அடைபட்டிருந்த ஆண்மக்கள் அறுவரும் மாண்டு கிடத்தலையும், பெண்மக்க ளிருவரும் குற்றுயிரோடு இருத்தலையும் கண்டு, வயிறு பற்றியெரிய, வயிற்றிலும் தலையிலும் அடித்துக்கொண்டு கோ வென்று புலம்பினார்கள்.

மேன்மாடியில் இருந்த கவுண்டர்கள் அழுகுரற் கேட்டு, கீழே இறங்கி ஓடிவந்து, புத்திரர் இறந்துபோனதைக்கண்டு, பெண்டிர் பேச்சைக்கேட்டு இம்மோசம் வந்ததென்று தம் முகத்தின்மேல் துணிபோட்டு அழுதார்கள். மனைவியர், 'மலட்டுமுண்டை சாபம் மக்கள் மேற் சாடிற்று.' அவள் வீட்டுக்குள் வந்திருந்தால் எல்லோரும் மடிந்திருப்போம்' என்று சொல்லிக் கணவர்களை நோக்கி, 'ஓடிப்போய் உங்கள் அக்காளை உடனே வழிமறுத்து அழைத்துவாருங்கள், அவள் நம் பிள்ளைகளை எழுப்புவாள்' என்றார்கள்.

கவுண்டர்கள் ஓட்டோடியுஞ்சென்று, தமக்கையைக் கண்டு, அவள் காலைப்பிடித்து, ''அக்கா, வேட்டைக்குப் போயிருந்தோம்; இப்பொழுதுதான் வந்தோம்; கால்செருப்பைக் கழற்றவில்லை, கைத் தடியை வைக்கவில்லை; நீ வந்தாய் என்று கேட்டு ஓடிவந்தோம்; வா, வீட்டுக்குப் போவோம்' என்றார்கள். தாமரை, 'தம்பிமார்களே, உங்களுடைய வஞ்சகத்தை நான் அறிவேன். முன்வைத்த காலைப் பின்வைக்க மாட்டேன். என் வாக்குப் பலிக்கும். போங்கள்' என்று கைகாட்டி மீண்டும் நடந்தாள். தம்பிமார், 'அக்கா, நீ பொறுத்தருள். மாண்ட எங்கள்மக்களை எழுப்பிக்கொடு' என்று இரந்தார்கள். தாமரை, 'எல்லாம் கடவுள்செயல், நாம் என்ன செய்யலாகும்? இறந்தவர்கள் எங்கேயேனும் பிழைப்பதுண்டா? மாண்டோர் பிழைத்தால் வையகம் கொள்ளுமோ? நல்லது, போங்கள் தன்வினை தன்னைச் சுட்டது. இனிமேலாவது உண்மையாய் நடவுங்கள்' என்று சொல்லிக் கையலைத்து மேல்நடந்தாள். தம்பிமார்கள் அக்காளைத் தூற்றிக்கொண்டு வீடு புகுந்து, மக்களுக்குச் செய்யவேண்டிய கருமாதிகளை நடத்தினார்கள்.

தாமரை தன் தாதியரோடும் ஆட்களோடும் மூன்று நாள் வழிநடந்து, நான்காம்நாள் சிற்றுலைப்பட்டணத்தை அடைந்தாள். வெள்ளிவள நாட்டின்கண் நடந்த செய்தியொன்றையும் அவள் கணவனிடத்துச் சொன்னவளல்லள்; அவனும் கேட்டவன் அல்லன்.

நாளுக்குநாள் தாமரை நாச்சிக்குப் பிள்ளைப்பேற்றைக் குறித்த எண்ணமும் [illegible] வளர்ந்துவந்தன. எங்ஙனமாயினும் மகப்பேற்றை யடைதல் வேண்டும் என்ற விருப்பம் அவள் மனத்தில் குடிகொண்டது. ஓமந்தூர்ப் பிராமணர்களை யழைத்துவந்து சோதிடம் பார்த்தால் பிள்ளைப்பேற்றுக்கு ஓர் வழி புலப்படும் என்று அவள் நினைத்துத் தன்கருத்தைக் கணவனுக்கு அறிவித்தாள்.

குன்றுடையான், கைதேர்ந்த சோதிடர்களான பத்துப்பேர் பிராமணர்களை அழைத்துவரும்படி சொல்லி ஓமந்தூருக்கு ஆளனுப்பினான். பணத்தாசை பிடித்த அந்தப் பிராமணர்கள் கூடிப்பேசி, தாங்கள் எல்லோரும் வேறுபாடின்றி ஒரேவிதமாய்ச் சோதிடஞ்சொல்லவேண்டுமென்றும், பெருந்தொகையைக் காணிக்கை பெறவேண்டும் என்றும் முடிவுசெய்து, பட்டை பட்டையாய் விபூதிதரித்து, மடிவேட்டிகளுடுத்து, பஞ்சாங்கங்களை யெடுத்துத் தம் கமுக்கட்டில் வைத்து வழிக்கொண்டு சிற்றுலைப்பட்டணத்தை அடைந்தார்கள்.

வந்த பிராமணர்களைக் கணவனும் மனைவியும் எதிர்கொண்டழைத்துப் பணிந்து, உபசரித்து, ஆசார மண்டபத்தில் பட்டுப்பாய்விரித்து வீற்றிருக்கச் செய்தார்கள். பின்பு, 'எங்களை ஏன் அழைத்தீர்கள்?' என்று அந்தப்பிராமணர்கள் வினவுதலும், தாமரைநாச்சி ஒருபுறமாய் ஒதுங்கிநின்று, 'சுவாமிகளே, மகப்பேற்றின் பொருட்டு அன்னதானம் சொர்ணதான முதலான தானங்களைச் செய்தோம்; பல தருமங்களையும் செய்தோம்; செய்தும், இந்தப் பாவிவயிற்றில் ஒரு குழந்தையும் பிறக்கவில்லை. எனக்கு, அரசுக்குப் பிள்ளையில்லை, அடுக்களைக்குப் பெண்ணுமில்லை. மலடி மலடியென்று வையகம் ஏசுகின்றது. மைந்தரில்லாக் கவலை, மனக்கவலை வாட்டுகின்றது. சோதிடம்பார்த்து எங்கள் குறைக்குக் காரணத்தையும், அதைப் போக்குவதற்கு வழியையும் ஆய்ந்துபார்த்துச்சொல்லும்படி உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்'' என்றாள்.

பிராமணர்கள், 'நல்லதம்மா, அப்படியேசெய்வோம் இது பெரியவீட்டுக் காரியம். அரை குறையாய் ஒன்றுஞ் சொல்லக்கூடாது. எல்லாவற்றையும் நன்றாக ஆராய்ந்து சொல்லவேண்டும். நீயோ அதற்குத் தகுந்த காணிக்கை கொடுக்கவேண்டும்' என்றார்கள்.

தாமரை, 'நீங்கள் கோருகிற காணிக்கையைச் செலுத்தத் தடையில்லை. உங்களுக்கு என்னவேண்டும், சொல்லுங்கள்' என்றாள்.

பிராமணர்கள், பிள்ளையார் பிடித்துவைத்து நான்கு மூலைகளிலும் நான்கு முக்காற்படி பணம் கொட்டவேண்டும்; நடுவே, ஆயிரம்பொன் தட்டக்காணிக்கை வைக்கவேண்டும்' என்றார்கள்.

தாமரை சம்மதித்து, தரையை மெழுகி, பிள்ளையார் பிடித்துவைத்து, அறுகுசூட்டிக் கும்பிட்டுக் காணிக்கை வைத்தாள்.

பிராமணர்கள் மகிழ்ச்சியுற்று, பல கேள்விகளைக் கேட்டுப் பஞ்சாங்கத்தைப் புரட்டிச் சோதிடம்பார்த்துப் பின்வருமாறு சொன்னார்கள்.

'தற்காலம் உங்களுக்குப் புத்திரசந்தானம் இல்லாமைக்குக்காரணம், மூன்றுதலைமுறையில் குன்றுடையாக் கவுண்டனது பாட்டன் ஒரு பசுவைக்கொன்ற பாவமே. இந்தப் பாவம் தீர்தற்கு நீங்கள், உங்கள் குலதெய்வமான மதுக்கரைச் செல்லாண்டியம்மனுக்கு, ஏழுநாட்கள் ஒருபொழுதிருந்து, மஞ்சள்தேர் ஓட்ட

வேண்டும்; பின்பு ஆயிரம் ஏழைகளுக்கு அன்னதானஞ் செய்யவேண்டும்; அதன் பின்பு மதுரையில் சொக்கநாதசுவாமி சந்நிதியில் பத்துவருஷம் அரிய தவஞ் செய்யவேண்டும். இவ்வாறு செய்தால் உங்களுக்கு, மண்ணுக்கு இரண்டாணும் மனைக்கு ஒரு பெண்ணும் பிறப்பார்கள்.'

பிராமணர்கள் இவ்வாறு சோதிடஞ்சொல்லி எழுந்துநின்று, காணிக்கைப் பணத்தை வாரி முடிந்து, பின்னும் தாமரைநாச்சியளித்த துப்பட்டிகளையும் சோமன்களையும் வாங்கிச் சுருட்டிவைத்துக்கொண்டு பணிந்துநின்ற கணவனையும் மனைவியையும் ஆசீர்வதித்துத் தங்கள் ஊரைநாடி விரைந்து சென்றார்கள்.

மதிப்புரை—நூற்பொருட் குறிப்பு.

மேற்குறித்த தலைப்பெயர் கொண்ட புத்தகப் பிரதியொன்று கிடைக்கப்பெற்றோம். 1. இறையனார் களவியலுரை, 2. குறுந்தொகை, 3. திருக்கோவையார், 4. நற்றிணை, 5. களவழி நாற்பது, 6. தேவாரம், 7. வீரசோழியம், 8. நாலாயிர திவ்யப்பிரபந்தம், என்ற எட்டுப் பழைய நூல்களின் விஷயசூசிகைகள் இதனுள் அடங்கியுள்ளன. இதனைத் தொகுத்தவர்—சென்னை யூனிவர்ஸிடித் தமிழகராதித் தலைமைப் பண்டிதர் ஸ்ரீமத் மு இராகவையங்கார் அவர்கள். பழைய நூற்பதிப்புக்களில், விஷய சூசிகைகளைச் சேர்த்து முதன்முதல் வெளியிடத் தொடங்கியவர்கள் மஹா மஹோபாத்யாயர் - ப்ரும்மஸ்ரீ சாமிநாத ஐயர் அவர்கள் என்பது தமிழ்மக்கள் நன்கறிவர். இவர்கள் பதிப்புக்களில் எல்லாம், மேனாட்டார் முறையைத் தழுவி, அரிய ஆராய்ச்சிக ளடங்கிய பொருட்குறிப்புக்கள் நன்கு அமைக்கப்பட்டிருத்தலைக் காணலாம். இக்குறிப்புக்களால் பாஷையறிவும் ஆராய்ச்சிவன்மையும் நாட்டிற் பெருகுதற் கிடமுண்டாயிற்று என்பதில் ஐயமில்லை. தமிழறிவு நன்குபெற்ற பண்டிதர்க்கு மட்டுமன்றி, சரித்திர வாராய்ச்சியாளராகிய ஆங்கிலம் வல்ல அறிஞர் முதலியவர்க்கும் இப் பொருட்குறிப்புக்கள் பேருதவி புரிவனவாகும். இலக்கிய விலக்கண சம்பந்தமாக முன்னோர் கருத்துக்களையும் அரிய ஒப்புமைப் பகுதிகளையும் சரித்திரச் செய்திகளையும் நன்கறிந்து, தமிழறிவையும் ஆராய்ச்சியையும் செவ்வைப்படுத்துதற்கு, இவ் விஷயசூசிகைகள் புரியும் உதவி அளவிடத்தக்கதன்று. இத்தகைய சிறப்புடைமைபற்றியே, சிறு நூல்களாயினும் அவற்றிற்கும் விஷயக்குறிப்பிட்டு வெளியிடுதலைத் தங்கள் பதிப்புமுறைகளில் இன்றியமையாத ஒன்றாகக் கொள்வாராயினர் மேனாட்டார். தமிழில், சிறந்த புலவர்களால் எண்ணிறந்த நூல்கள் வெளிவந்திருப்பினும் இம்முறையை அவர்கள் கையாண்டனர் இல்லை. இதற்கு, அக்குறிப்புக்களை அமைக்கும் வகையும் அதன்பயனும் அறியாமையோ, அறிந்தும் நூற்பெருக்கத்தாற் பொருட்செலவாகுங்கருத்தோ, அன்றி உள்ள மடியோ காரணமாகும். ஒருசிலர், இவ்விஷயசூசிகைகளின் வெளியீட்டால், தமிழை ஊன்றிக் கற்கு முறை நாட்டிற் குறையலாயிற்று என்றும், தமிழ் நன்கறியாரும் இச்சூசிகைகளினின்று தமக்கு வேண்டிய பொருட்கூறுகளைப் பொறுக்கிக்கொண்டு, கட்டுரை வரைந்து பிரபலராகிவிடுகின்றனர் என்றும் குறைகூறுவர். இவர்கள் கூற்றில் ஒரு பகுதி உண்மையேயாயினும், தமிழை நன்குகற்ற பண்டிதர்க்கு ஞாபகக் கருவியாகவும் அவ்வாறு கல்லார்க்கு அறிவுறுத்துங் கருவியாகவும் இக்குறிப்புக்கள் உள்ளன என்பதே பெரிதும்பொருந்தும். பண்டிதரல்லாதாரையும் ஆராய்ச்சித்துறையில் இழியும்படிசெய்து, முடிவில் தமிழ்க் கடலில் மூழ்கித் திளைக்கும்படி அவர்களைச் செய்வித்தலால், இவை யாவர்க்கும் வேண்டத்தக்கவை என்றே சொல்லலாம். ஆகவே, தமிழ்நூல்களெல்லாம் சிறந்த பொருட்குறிப்புக்களுடன் வெளியிடப்படுமாயின், தமிழாராய்ச்சி மிகவும் சுத்தமுறும் என்பதில் சிறிதும்ஐயமில்லை. ஐயரவர்களும் அவர்களைப் பின்பற்றியவர்களும் பதிப்பித்த நூல்களை நோக்கும் போதெல்லாம், 'இத்தகைய விஷயசூசிகைகள் ஏனைய தமிழ்நூல்கட்டும் அமைந்திலவே' என்று கவன்று கூறிய தமிழ்மக்கள் பலருண்டு. இந்நூலினைத் தொகுத்த ஐயங்கார் அவர்களை நாம் நேரில் அறியோமாயினும், அவ்வாறு கவன்றவருள் அவர் தலைமையானவர் என்பதை இந்நூல் வெளியீடு வெளியாக்குகின்றது. விஷயசூசிகையின்றி வெளிவந்த பழைய நூல்கள் எட்டனுக்கு இடப்பட்ட பொருட்குறிப்புக்கள் இப்புத்தகத்தில் அடைங்கியுள்ளன. அன்பர் சிலர் தூண்டுதலின்மேல், தம்மிடமிருந்த அக்குறிப்புக்களிற் சிலவற்றை ஐயங்கார் அவர்கள் அச்சேற்றிவெளியிட நேர்ந்ததாகத் தெரிகின்றது. இவற்றுள், களவியலுரைக்கும் குறுந்தொகைக்கும் அமைந்த விஷயசூசிகைகள் விரிவுடையனவாயினும், வேறுசில நூல்களுக்குச் சுருக்கமாகவே அவை அமைந்துள்ளன. ஆயினும் சரித்திர வாராய்ச்சியாளர்க்கு வேண்டிய செய்திகளை அவற்றிற்காணத் தடையில்லை. ஐயங்கார் அவர்கள் விரிவாகக் குறித்திருந்தவற்றைச் சுருக்கியே இப்போது அவை வெளியிடப்பட்டன என்று தோற்றுகின்றது. தேவாரத்துக்கும் திவ்யப்பிரபந்தத்துக்கும் அமைக்கப்பட்டவை, அப் பெருநூல்களில் முக்கியமானவற்றை ஆராய்ந்து திரட்டப்பட்டவை என்று சொல்லலாம்.

இத்தகைய புத்தக வெளியீடு, தமிழ்மக்கட்கு நல்விருந்தாயுள்ளமையால், இதனைப் பாராட்டிப் பலரும் எதிர்கொள்வார்கள் என்பது திண்ணம். இதனை நமக்கு அனுப்பி, நண்பர்—அன்பர் சிலரின் சொந்த உபயோகத்துக்கென்று 50 பிரதிகளே இப்போது அச்சிடப்பட்டன என்றும், அதனால் விலைக்குவரும் பிரதிகள் அத்தொகையினும் குறைவுடையவே என்றும், ஆகவே, 175 பக்கமுள்ள இப்புத்தகத்திற்கு 10 ரூபாயாக விலைத்தொகையை அதிகமாக்க நேர்ந்துவிட்டதென்றும், தமிழ்மக்கள் இப்பதிப்பிற் காட்டும் அவாவை எதிர்நோக்கி, பழைமை பெருமையுடைய இலக்கிய விலக்கணங்கட்கெல்லாம் சிறந்த பொருட் குறிப்பிட்டுப் பெருநூலாகச் சிறு விலையில் வழங்கக்கூடும் என்றும் அறிவித்துள்ளார். இவற்றால், இப்புத்தக வெளியீட்டின் நோக்கம் இன்னதென்பது வெளியாகின்றது. தமிழறிவிற்கும் ஆராய்ச்சிக்கும் பேருத[illegible]யாகும் வண்ணம் இத்தகைய நூல் வெளியீ[illegible] கட்குத் தமிழ்நாடு பெரிதுங் கடப்பாடுடை[illegible]

ஜூலியஸ் ஸீஸர்

[ஓர் ஷேக்ஸ்பியர் நாடகம்]

[194-வது பக்கத் தொடர்ச்சி]

அங்கம் 2. களம் 2.

இடம்:—உரோமாபுரி. ஸீஸர் அரண்மனையில் ஓர் அறை. (இடியும் மின்னலும்.)
இரவில் அணிந்துகொள்ளும் மேலங்கியைப் பூண்டவனாய் ஸீஸர் வருகின்றான்.

ஸீஸர் :—விண்ணேனும் மண்ணேனும் இன்றிரவு அமைதியா யிருந்ததில்லை. "ஓகோ! காமின்கள்! ஸீஸரைக் கோல்கின்றனர்" என்று கல்பர்னியா தன் துயிலிடையே மும்முறை கதறினள் (1). யார் உள்ளே?

[பணியாளொருவன் வருகின்றான்]

பணியாள்:—எம் பெரும? (2)

ஸீஸர்:—போய், உடனே பலியிடும்படி பூசாரிகளுக்குச் சொல்லி, அதன் பலனைப்பற்றிய அவர்கருத்தைத் தெரிந்துவா. (3)

பணியாள்:—வருகின்றேன், என்பெரும.

[பணியாள் போகின்றான்]

[கல்பர்னியா வருகின்றாள்]

கல்பர்னியா:-யாது கருதுகின்றனை, ஸீஸர்? வெளிச்செல்ல நினைக்கின்றாயோ? உன் வீட்டைவிட்டு நீ இன்றைக்கு அசையப்படாது (4).

ஸீஸர்:—ஸீஸர் போகத்தான் போவான். என்னைப் பயமுறுத்தியவை என் முதுகையே யன்றி யொருபோதும் பார்த்ததில்லையே. ஸீஸரின் முகத்தினைப் பார்த்தவுடனவை மறைந்தொழிந்துவிட்டன (5).

கல்பானியா:—ஸீஸர், சகுனங்களைச் சார்ந்து நான் ஒருபோதும் நின்றதில்லை. எனினும், இப்பொழுதவை யென்னை வெருவச் செய்கின்றன. நாம் கேட்டவைகளும் கண்டவைகளும் அன்றி, காவற்சேவகன் கண்ட மிகக்கொடிய காட்சிகளைக் கூறுவானொருவன் உட்புற மிருக்கின்றான். (6) பெண்சிங்கமொன்று தெருக்களில் குட்டிகளிட்டது. கல்லறைகள் வாய்திறந்து தம் சவங்களைத் தந்துவிட்டன (7). போர்முறையிற் சேனைகள் அணிவகுத்து, எரிதரும் வெந்திறல் வீரர்கள் முகில்கள்மீதிருந்து பொருகின்றார். நகர்ச்சபை மண்டபத்தின்மீது உதிரம்பனித்தது அதுவே (8). போரின் முழக்கம் காற்றில் குமுறியது. குதிரைகள் கனைத்தன, இறக்கும் மனிதர் மறுகினர். பூதங்கள் வீதிகளில் குழறிக் கூவினவாய்த் திரிந்தன (9). ஓ, ஸீஸர்! இவைதாமோ யாதிற்கும் உதவாதனவே (10); அவைகளை யான் அஞ்சுகின்றேன்.

ஸீஸர்:—ஆற்றல்மிகு கடவுளர்களால் குறித்த முடிவுடைய எதனைத்தான் தவிர்க்கஇயலும் (11)? எனினும், ஸீஸர் வெளிப்போந்திடுவான்? ஏனெனில், நிமித்தங்கள் இவைதாம்,ஸீஸருக் காகுமளவு பொதுப்பட உலகினிற்கு மாவதாகும் (12).

கல்பர்னியா:—இரவலர் இரக்குங்காலை உற்கைகள் காண மாட்டா; புரவலர் விளிவு தன்னைக் ககனமே கொளுத்திக் காட்டும் (13).

ஸீஸர்:—தம்முடைய விளிவின்முன் பன்முறை சாகின்றார் கோழைகள் (14). சூரர்களோ சாவதனைச் சுவைக்குமுறை யொன்றே (15). இதுகாறும் யான் கேட்டுள அதிசயங்களிலெல்லாம், மனிதர் வெருவ வேண்டுவதே,யாதினும் வியப்புடையதா யெனக்குத் தோன்றுகின்றது (16). விலக்கரிய ஒரு முடிவாய மரணந்தான் வருங்காலத்தில் வந்துவிடல் கண்டிருந்தும்—

[பணியாளன் வருகின்றான்]

நிமித்தகர் யாது கூறுகின்றார்?

பணியாளன்:—இன்றைக்கு நீ வெளிப்பெயர அவர் உடன்படார். பலியொன்றின் குடர்களைப் பறித்தலும், அவ்விலங்கினுள் இதயம் ஒன்றும், காண்கிலார் (17).

ஸீஸர்:—கோழைமையின் இளிவிற்கே தெய்வங்கள் இதனைச் செய்கின்றன. பயம்பற்றி இன்றைத்தினம் மனையகத்தே தங்குவானாயின் ஸீஸரொரு இதயமற்ற விலங்கேயாயிருத்தல்வேண்டும் (18). இல்லை, ஸீஸரோ மாட்டான்(19). தன்னிலும் ஆபத்து அதிகம் செய்பவன் ஸீஸரென்பது ஆபத்தே நன்கறியும் (20). ஓரேநாளிற் பிறந்த இரண்டு சிங்கங்கள் நாங்கள்; மூத்தவனும் வீமம்மிகுந்தவனும் யான் (21) ;—ஸீஸர் வெளிச்செல்வான்.

கல்பர்னியா:—ஐயகோ, என் தலைவ, உனதறிவு உறுதியிற் றின்று தீர்கின்றது (22). இன்றைத்தினம் புறத்தே போகற்க. உன்னை மனையகம் வைத்திருப்பது, நினதன்றி, என் பயமேஎன் றறைத்திடுவாய் (23). மார்க் ஆண்டனியைச் செனட் சபைக்கு அனுப்புவோம்; நீ இன்று சுகமின்றி இருக்கின்றாயென்று அவன் இயம்பட்டும்; முழந்தாள் படியிடத் தொழுதுரைக்கு மென்சொல் இதனிற் செல்லுமாறு புரிந்திடாயோ! (24).

ஸீஸர்:—நான் சுகமில்லை என்று மார்க் ஆண்டனி சொல்லட்டும். உனதிச்சைக்கு யான் இல்லின்கண் இருந்திடுவேன் (25).

[டெஸியஸ் வருகின்றான்]

இதோ டெஸியஸ் ப்ரூட்டஸ்; அன்னவா றிவனவர்களுக்குச் சொல்லட்டும்.

குறிப்பு:—'ஸீஸரைக் கொல்லற்க' என்பாள்போல் ப்ரூட்டஸின்பால் அவன்மனைவி போர்ஷியா மன்றாடியதை முன்களத்தில் காட்டிய ஷேக்ஸ்பியர், இக்களத்தில், கல்பர்னியா தன் நாயகன்பால், "நீ கொலையுண்ணற்க" என்பாள்போல் மன்றாடுவதைக் காட்டுகின்றார். வேறுவேறு இவ்விரு மனைவியர்க்கும், விடயம் இன்னதென்பது தெரியாதேனும், அவர் தத்தம் நாயகர்களைத் தடுத்துரைக்கும் மென்மொழிகள் நயம்மிக வாய்ந்தன. இவ்விருகளன்களும் அடுத்தடுத்து அமைந்திருக்குமிது நாடகச்சுவையினை நலமுற வளர்க்கின்றது.

(1) ஸீஸரைச் சிலர் கொல்வதுபோல் கனாக்கண்ட கல்பர்னியா வெருவிக்கூவியதை ஸீஸர் இங்குக்கூறுகின்றான்.

(2) யார் உள்ளே, என்று ஸீஸர் அழைத்ததற்குப் பதிலாய் ஒரு பணியாள் வந்து, 'எம்பெரும, என்ன செய்ய வேண்டும்" என்று கேட்கின்றான்.

(3) தெய்வங்களுக்குப் பலியிட்ட விலங்கினை அறுத்துப் பார்த்து அதன் குடல் முதலிய உறுப்புக்களின் அமைப்பிற்கேற்பக் குறிசொல்வது அக்கால உரோமர்களுக்கு வழக்கமாயிருந்தது.

(4) அதிகாலையில் தன் படுக்கையைவிட்டு எழுந்து போந்த ஸீஸர் அன்றையதினம் வெளிச்செல்லக் கருதியிருக்கின்றானென்பதுணர்ந்த கல்பர்னியா, நிகழ்கின்ற உற்பாதங்களாலும் தான் கண்ட கனவாலும் ஸீஸருக்கு ஏதோ தீங்குவர இருக்கின்றதென்றஞ்சி, அவனை வீட்டிலேயே இருக்கும்படி வற்புறுத்துகின்றாள்.

(5) தன்னுடைய பெருமை ஆண்மை முதலியவைகளைச் சார்ந்துஉரைக்கும்போதெல்லாம் ஸீஸர் தன்னையே படர்க்கையில் பேசிக்கொள்வது வழக்கம். என்னைப் பயமுறுத்தவேண்டுமென்று நினைப்பவைகள் எல்லாம் என் பின்னால் குழுமிநின்று கூவுமேயொழிய, நான் திரும்பிப் பார்ப்பேனானால்,அவைகளெல்லாம்வெருவி இருந்தவிடந் தெரியாமல் ஓடிப்போய்விடும்—என்பது பொருள்.

(6) இன்னுஞ் சில உற்பாதங்களை, இரவில் நகர்க்காவல் புரியுஞ் சேவகன் கண்டுளன். அவைகளைக் கேட்டுவந்துரைத்தவன் உட்புறமிருக்கின்றான்—என்பது பொருள்.

(7) சவங்களைப் பெட்டிகளிலிட்டுப் புதைத்திருக்கும் குழிகள் கல்லறைகளாகும். அக்கல்லறைகளைத் திறந்துகொண்டு உள்ளிருந்த சவங்கள் வெளிவந்து நடமாடுகின்றன—என்பது பொருள்.

(8) ஆகாயத்தில் நிகழ்கின்ற போரினால் சொரிந்த இரத்தமே, நகர்ச்சபை மண்டபத்தின்மீது வீழ்ந்தது—என்பது பொருள்.

(9) பூதங்கள்—மாண்டவர் தம் ஆவி ரூபங்கள் (Ghosts).

(10) உதவாதன என்பது, நன்மைக்குதவான என்னும் பொருளது—கேடே விளைவிக்கும், என்பது கருத்து.

(11) நான் கெடுதல்வேண்டும் என்று கடவுளர் கருத்திற் கொண்டுளராயின் அதனைத் தவிர்க்க ஒருவராலும் முடியாது. வீட்டினுள்ளேயே இருந்துவிட்டால் வருதற்கிருக்கும் கேடு வாராதொழியுமோ—என்பது பொருள்.

(12) இந்தத் தீய நிமித்தங்களெல்லாம் என்னையே பற்றித்தான் நிகழ்கின்றன என்று கொள்வானேன். உலகம் முழுவதற்கும் இவை பொதுவாயிருத்தலின், என்னையன்றி வேறு சிலர் கேட்டினைக் குறிப்பனவென்றுமெண்ணலாமே. எனின், வீணே நீயேன் கவல்கின்றாய்; நான் இன்றைய தினம் வெளியிற் செல்லத்தான் செல்வேன்—என்கின்றான் ஸீஸர்.

(13) இரவலர் - பிச்சைக்காரர். உற்கை - எரி நக்ஷத்திரம். புரவலர் - அரசர். விளிவு - மரணம். ககனம் - ஆகாயம். கொளுத்திக்காட்டும் - தெரியக்காட்டும். எரிநக்ஷத்திரம் தோன்றுவதற்கேற்பக் கொளுத்திக்காட்டும் என்று கூறப்பட்டது.

(14) இறுதியில் சாகின்றநாள் ஒன்றிருக்க அதன்முன், இப்பொழுது சாவோமோ இதனாற் சாவாமோ என்று பயந்துபயந்துகோழைகள்எத்தனையோமுறைசெத்தவர்களுக்கே சமானமாகிவிடுகின்றார்—என்பது பொருள்.

(15) அஞ்சாத நெஞ்சத்திட்பமுடையவர்கள், மரணத்தை ஒரு முறைதான் உணர்கின்றார்.

(16) வெருவ வேண்டுவதே, என்பதன்முன் 'மரணத்திற்கு' என்பதை அவாய்நிலையாய் வருவித்துக்கொள்ள வேண்டும்.

(17) பலியிட்ட ஆடு இரத்தஈரல் இல்லாததாயிருந்தது.

(18) இதயம்-அஞ்சாத வீரத்திற்கு இருப்பிடம். பலியிட்ட விலங்கினுள் இயற்கைக்கெல்லாம் மாறாக இதயம் ஒன்று தென்படவில்லை யென்னின், அதன் குறிப்பு யாது?—உயிரிற்கு அஞ்சுகின்ற கோழைகள், இதயமில்லா விலங்கிற்கே நிகரென்று கடவுளர் இளிவர இக்குறிப்பினால் கூறுகின்றனர்—என்கின்றான் ஸீஸர். ஆதலின் அஞ்சினான் என்னும் வசைக்குத் தான் ஆளாகாதவண்ணம் வெளிப்போகத் துணிகின்றான்.

(19) இதயமில்லா விலங்காகமாட்டான் என்றேனும், வீட்டிலே தங்கமாட்டான், என்றேனும் பொருள் கொள்ளலாம்.

(20) எனக்கொரு ஆபத்தும் வராது. வந்த ஆபத்தும் என்னைக் கண்டால் பயந்தோடிவிடும். ஆபத்திற்கே ஆபத்து செய்துவிட வல்லவன் யான்—ஆபத்திற்கே ஆபத்துச் செய்வதாவது, அவ்வாபத்தைத் தன் ஆற்றலால் நீக்கிவிடுவது.

(21) தானும், ஆபத்தென்னும் அதுவும் ஒரே சிங்கத்தின் வயிற்றில் பிறந்த இரண்டு குட்டிகளாம். வீமம்-பயங்கரம்.

(22) உறுதி - மனத்துணிவு. இன்று வெளிப் போதலாகாதென்பதை உணரவல்ல அறிவுடையவனே நீ; ஆயினும் உன்னுடைய இந்த நெஞ்சத்துணிவு அவ்வறிவையும் அழித்துவிடுகின்றது.

(23) நீயே பயந்து வீட்டில் இருந்துவிட்டதாகச் சொல்லவேண்டா. என்னுடையபயத்திற்கு இணங்கியேதான் இருந்தனை என்று சொல்.

(24) நான் சொல்வதற்கு நீ இணங்குமாறு வேண்டுகின்றேன்—என்பது பொருள்.

(25) இச்சைக்கு - இச்சையின்பொருட்டு.

தமிழ்ப் பாடம் 11.

நள வெண்பா—சுயம்வர காண்டம்

[189-வது பக்கத் தொடர்ச்சி]

மன்னன் விடுத்த வடிவிற் றிகழ்கின்ற
அன்னம்போய்க் கன்னி யருகணைய—நன்னுதலும்
தன்னாடல் விட்டுத் தனியிடஞ்சேர்ந் தாங்கதனை
யென்னாடல் சொல்லென்றா ளீங்கு. 34.

பதப்பிரிவு:—மன்னன் விடுத்த வடிவில் திகழ்கின்ற அன்னம் போய் கன்னி அருகு அணைய நல் நுதலும் தன் ஆடல் விட்டு தனி இடம் சேர்ந்து ஆங்கு அதனை என் நாடல் சொல் என்றாள் ஈங்கு.

அன்வயம்:—ஈங்கு நாடல் என் சொல்? என்றாள், என நான்காம் அடியை மாத்திரம் மாற்றிப் படித்தால் அன்வயம் ஆகும்.

பதவுரை.

மன்னன் - நளமகாராஜன்
விடுத்த - அனுப்பின (அந்த)
வடிவில் - அழகிலே
அன்னம் - அன்னமானது
போய் - (விதர்ப்பநாட்டிற்கு) போய்
கன்னி - தமயந்தியினது
அருகு - சமீபத்தில்
அணைய - சேரவே,
நல் - நல்ல
நுதலும்-நெற்றியையுடையவளாகிய தமயந்தியும்
தன் - தன்னுடைய
ஆடல் - (தோழியருடன் ஆடியிருந்த) விளையாட்டை
விட்டு - விட்டுவிட்டு
தனி - தனியான
இடம் - ஒரு இடத்திற்கு
சேர்ந்து - (அன்னத்தை) அழைத்துச் சென்று
ஆங்கு - அவ்விடத்தில்
அதனை - அவ்வன்னத்தை (பார்த்து),

"ஈங்கு - இவ்விடத்திற்கு
நாடல் - (நீ) வந்தது
என் - எதற்காக
சொல் - சொல்வாய்"
என்றாள் - என்று கேட்டாள்.

விரிவுரை:-அன்னம் வந்ததென்றால் அதைக் கண்டவுடன் தமயந்தி, விளையாடிக்கொண்டிருந்த தோழியர்களையெல்லாம் விட்டு ஒருவரும் இல்லாத ஒரு தனியிடத்திற்கு அந்த அன்னத்தை அழைத்துக்கொண்டு போய்ப் பிறகு அவள் அதை, "நீ வந்த காரியம் என்ன சொல்" என்று கேட்டாள் என்பது வியப்பைத் தருவதா யிருக்கின்றது. ஒவ்வொரு நாளும் இந்த அன்னம் வேறுவேறு நாடுகளுக்குப்போய் அவ்வந்த அரசர்களைப் பார்த்து அறிந்து, தமயந்தியினிடம் இன்னார் இன்னார் இப்படிப்பட்டவர் என்று சொல்லிவருவதும், அவள் யாவும் கேட்டு 'எனக்குத் தகுந்த நாயகன் அவனல்லன், வேறுதேசம் போய்ப் பார்' என்று அனுப்புவதும் வழக்கமா யிருந்ததோ யாதோ! இந்த இரகசியம் தமயந்திக்கும் அன்னத்திற்கும் பலநாட்களாக நடந்துவராமற்போனால் இன்றைக்குமாத்திரம் வந்ததும் வாராததுமாய் அதை நாலுபேர் முன்னிலையில் கேட்காமல் தனித்த இடம்சேர்ந் திவள் கேட்பானேன்! பிடிபட்ட அன்னம் நளனால் தனக்குத் தீங்கு இல்லையென்று பயம் தீர்ந்ததும், தன் கையில் வைத்திருந்த வொன்றை எடுத்துத் தருவதுபோல், "உனக்குத் தகுந்த மணாட்டி தமயந்தியே" என்று தனது பொறுப்பிலேயே துணிந்து எடுத்துரைத்ததும் இப்படி எண்ணுவதற்கு ஆதாரமாகின்றது. நளனை விட்டுப் புறப்படும்போது, 'அவனை உனக்கு விவாகம் செய்து வைக்கின்றேன்' என்றிது நிச்சயமுடன் வாக்களித்ததும், தமயந்தி தனக்கு நாயகனாக வரவேண்டியவனுடைய இலக்ஷணங்களை எல்லாம் அன்னத்தினிடத்தில் சொல்லியிருக்க, அவ் விலக்ஷணங்கள் யாவும் இந்நளனிடத்தில் அமைந்திருக்கக் கண்டவுடன், இவனையவள் ஏற்றுக்கொள்வா ளெனும் உறுதிபற்றி நேர்ந்ததா யிருக்கவேண்டும்.

இது மாத்திரமன்று. வந்த அன்னத்தைத் தமயந்தி தன் விளையாட்டையும் விட்டுத் தனிஇடம் அழைத்துப்போய் 'இப்பொழுது என்ன சமாசாரம்' என்று கேட்டாளென்றால், அன்னமும் என்ன மறுமொழி தருகின்றது. தான் நிடதநாடு போனதும் அங்கே பிடிபட்டதும் பயங்கொண்டதும், பிறகு நளனோடு பேசியதும் ஆகிய வரலாறு ஒன்றும் சொல்லவில்லை. உடனே அடுத்த பாட்டில் நளனை வருணித்து அவன் பேரையும் சொல்லி, 'இவனே யுனக்கு நாயகனாவான்' என்று விளம்புகின்றது. முன்சங்கேதப்படி போய்வந்த ஒரு அந்தரங்க தூதனுக்கே இவ்வாறு சொல்வது பொருந்துமேயல்லாது புதியதாய் நிகழ்ந்த ஒரு விஷயத்தைச் சொல்பவர் வேறு வித்தாரமாய்ச் சொல்வது இயற்கை. இவைகளைக் கேட்ட தமயந்தியும், "அன்னமே, என் ஆவியை நீ அளித்தாய்" என்று பின் வாழ்த்துகின்றதும் மேற்காட்டிய கருத்தை ஒருவாறு புலப்படுத்துகின்றது.

குறிப்பு:—மன்னன் விடுத்த வடிவில் திகழ்கின்ற அன்னம், என்ற வாக்கியத்தில் விடுத்த திகழ்கின்ற இரண்டும் பெயரெச்சங்கள். பெயரெச்சம் என்பது எதற்குப்பெயர் என்பதை மறந்துபோயிருப்போனால், முன் பாடங்களில் சொல்லியிருப்பனவற்றை மறுபடி பார்த்துக் கொள்ளவும். வா, போ, நில், உண், பார் என்பன போன்று ஒரு காரியத்தை (அதாவது வினையை) செய்யச் சொல்கின்ற பதங்கள் வினைச்சோல் எனப்படும் இந்த வினைச்சொல் தான் குறிக்கின்ற காரியத்தை முடிவாகக்காட்டினால் அப்பொழுது வினைமுற்று. வாந்தான், போவாள், நிற்கின்றேன்; உண்பார்கள், பார்த்தது, இவைகளெல்லாம், வருவது போவது நிற்பது உண்பது பார்ப்பது ஆகிய காரியங்களை முன்னாலேயோ இப்பொழுதோ இனிமேலோ முடிவடையும் நிலையில் காட்டுவதால் அவை வினைமுற்று (முற்றுதல் - முடிதல்) ஆகின்றன. ஆனால், வந்த போகிற நிற்கும் உண்டு பார்க்க, என்றே, வா போ நில் உண் பார் என்பன போன்ற ஒரு காரியத்தைச் செய்யச் சொல்கிற பதங்களை ஆதாரமாகக் கொண்டு பிறந்த வார்த்தைகள் நின்றுவிடுமானால், அந்தக் காரியம் முடிவுபடத் தோன்றவில்லை யல்லவா! இவைகளும் காரியஞ் செய்கின்ற சம்பந்தமாக வந்த சொற்களாதலால் வினைச்சொற்களே. ஆனால் காரியத்தின் முடிவு தோன்றாதபடியினால் அவை எச்சங்கள் எனப்படும். முடிந்த வினைச்சொல் முற்றுவினை, முடியாத வினைச்சொல் எச்சவினை. எச்சம் என்றால் குறைவு என்பது ஒரு அர்த்தம். இந்தக் குறைவு, வாக்கியத்திலே இருக்கின்ற வேறு பதங்களைக்கொண்டு நிறைவடைய வேண்டும். அப்படி அர்த்தத்தைத் தொடர்ந்து பூர்த்தி செய்துவைக்கக்கூடிய மற்றப் பதம் வினைச்சொல்லாக இருக்குமானால், இந்த எச்சவினைக்கு வினையெச்சம் என்று பெயர். அல்லது பூர்த்தி செய்கின்ற பதம் பெயர்ச் சொல்லா யிருக்குமானால் அந்த எச்சவினைக்குப் பெயரெச்சம் என்று பெயர். வினைச்சொல்லைக் கொண்டு அது முடியுமானால், அந்த எச்சவினைக்கு வினையெச்சம் என்றும், பெயர்ச்சொல்லைக் கொண்டு முடிகின்ற எச்சவினைக்குப் பெயரெச்ச மென்றும், கொண்டு முடிகிற காரணத்தால் பெயர் வந்தன. ஆனால், வினையெச்சம், பெயரெச்சம், இரண்டும் வினைச்சொற்களே. பெயரெச்சம் என்று இருக்கிறபடியினால் அது பெயர்ச்சொல்லென்று நினைக்கப்படாது. பெயர்ச்சொல்லைக் கொண்டு முடிகிற எச்ச வினையே பெயரெச்சம்.

பெயர்ச்சொல் என்றால் என்ன வென்பது யாவருக்கும் தெரியும். ஒன்றின் பேரைக் குறிக்கின்ற சொற்கள் பெயர்ச் சொற்கள். பெட்டி மரம் நாய், இவைகளெல்லாம் பொருளின் பெயர்களாதலால் பெயர்ச் சொற்கள். பொருளின் பெயராகத்தான் இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. அது ஒரு பேராக இருக்கவேண்டும், அவ்வளவுதான். அழகு, சிவப்பு, உயரம், இவைகளெல்லாம் பொருளின் பேர்களல்ல, ஆனால் குணங்களின் பேர்; ஆகையால் பெயர்ச் சொற்களே. அப்படியே, கொலை, பேச்சு, ஓட்டம், என்பன போன்ற சொற்கள், பொருளின் பேருமல்ல, குணத்தின் பேருமல்ல; ஆனால் ஒரு காரியத்தின் பெயர், ஆகையால் அவைகளும் பெயர்ச்சொற்கள். காரியம் செய்வதைப் பற்றிச் சொன்னால் அப்பொழுது வினைச் சொற்களாகிவிடும். கொன்றான், பேசினேன், ஓடுகின்றது என்று வந்தால் வினைச்சொல். அந்த அந்தக் காரியத்தின் பெயரைச் சொல்கிற கொலை பேச்சு ஓட்டம், போன்ற பதங்கள் பெயர்ச் சொற்கள். ஒன்றன் பெயரில், குறைவும் முடிவும் இருக்க மாட்டாதாத

லால் முற்றுப்பெயர் எச்சப்பெயர் என்று இலக்கணத்தில் இல்லை.

எச்சவினைகள், ஒரு வாக்கியத்தில் உள்ள வேறொரு வினைச்சொல்லையாவது (அது, வினைமுற்றாகவாவது வினையெச்சமாகவாவது பெயரெச்சமாகவாவது இருக்கலாம்) அல்லது பெயர்ச்சொல்லையாவது அர்த்தத்தில் கொண்டு முடியும். அர்த்தத்தில் கொண்டு முடிகிற பதத்தைத்தான் வாக்கியத்தில் எங்கிருந்தாலும்தேடிப் பார்த்துத் தீர்மானம் செய்யவேண்டும். அர்த்தம் பொருந்தினாலும் பொருந்தாமற் போனாலும் பக்கத்தில் வருகிற வார்த்தையை எடுத்து முடித்துக்கொண்டு விடப்படாது.

இந்தப் பாட்டிலே இருக்கின்ற வினைச்சொற்களை உதாரணமாய்ப் பார்ப்போம்:—

விடுத்த:—அனுப்பவதாகிய காரியத்தைக் குறிக்கின்றபடியினால், இது வினைச்சொல். ஆனால் முற்றுவினையா, எச்சவினையா? விடுத்த, என்று தனியாய் நின்றால் முடிவாகவில்லையே, ஆகையால் எச்சவினை. ஆயின் பெயரெச்சமா, வினையெச்சமா? மன்னன் விடுத்த வடிவில் திகழ்கின்ற அன்னம்போய், என்ற வாக்கியத்தில் விடுத்த என்பதை அர்த்தத்தில் எது தொடர்கிறது? விடுத்த வடிவு, என்று சேர்த்தால், அனுப்பின அழகு, என்கிற அர்த்தமே யிராதே. மன்னன் அழகையா அனுப்பினான்? இல்லையே. ஆகையால் விடுத்த அன்னம் என்று, அர்த்தத்தில் அன்னம் என்பதையே கொண்டுமுடியும். அன்னம், ஒரு பொருளின்பேர் அல்லவா? ஆகையால் அது பெயர்ச்சொல்; விடுத்த என்ற எச்சவினை அன்னம் என்ற பெயர்ச் சொல்லைக்கொண்டு முடிகின்றபடியால் பெயரெச்சம்.

திகழ்கின்ற :—இதுவும் அன்னம் என்பதைக் கொண்டு முடிகின்ற பெயரெச்சம். திகழ், என்றால் விளங்குகின்ற காரியத்தைச் செய்யச் சொல்வது. வருகின்ற பையன் என்பதைப்போல், திகழ்கின்ற அன்னம், என்றாயிற்று. திகழ்கின்ற என்பதும் பெயரெச்சந்தா னல்லவா!

விடுத்த திகழ்கின்ற, என்ற இரண்டு பெயரெச்சங்களும் அன்னம் என்ற ஒரே சொல்லைக்கொண்டு முடிகின்றன. அரசன் அனுப்பினதும் அழகோடு விளங்குவதுமான அந்த அன்னம், என்று பொருள் கூடும்.

போய்:—இது வினையெச்சம், அணைய என்னும் மற்றொரு வினையெச்சத்தைக் கொண்டு முடிகிறது.

அணைய:—இந்த வினையெச்சம், விட்டு என்ற வினையெச்சத்தைக்கொண்டு முடிகிறது.

விட்டு:—இந்த வினையெச்சம், சேர்ந்து என்ற வினையெச்சத்தைக் கொண்டு முடிகிறது.

சேர்ந்து:—இந்த வினையெச்சம், என்றாள் என்னும் வினைமுற்றைக் கொண்டு முடிகிறது.

இந்தப் பாட்டில் வினையெச்சம், இன்னொரு வினையெச்சத்தையும் அல்லது வினைமுற்றையும் கொண்டு முடிவதற்கு உதாரணங்கள் இருக்கின்றன. ஆனால் வினையெச்சம் பெயரெச்சத்தைக் கொண்டு முடிவதற்கு உதாரணம் காணவில்லை. ஓடிவந்த பையன் இடறி விழுந்து அழுதான், என்றொரு வாக்கியம் அமைத்துக்கொள்வோம். ஓடி, என்பது வினையெச்ச மல்லவா. அது வந்த என்ற பெயரெச்சத்தையும், இடறி என்ற வினையெச்சம், விழுந்து என்ற இன்னொரு வினையெச்சத்தையும், விழுந்து என்ற வினையெச்சம் அழுதான் என்ற வினைமுற்றையும் கொண்டுமுடிய இவ்வாக்கியத்தில் எல்லா உதாரணங்களும் இருக்கின்றன.

வினையெச்சத்தின் பொருள்கள் காரணம் காரியம் உடனிகழ்ச்சி யென்று மூன்று இருக்கின்றன வென்றும், எச்சங்கள் உடன்பாடாகவும் எதிர்மறையாகவும் இருக்கலாமென்றும், அவைகளின் உருவமும், முன்னால் பல இடங்களில் நாம் காட்டியிருக்கின்றோம். அவைகளையும் இதனோடு சேர்த்துப் படித்துக்கொண்டு மனதூன்றி விஷயத்தைக் கற்று நினைவினில் நிறுத்திக் கொள்ளவும். இன்னும் புணரிலக்கணம் தொடரிலக்கணம் இவைகளைப்பற்றி ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லை. அதற்கு ஆதாரமாக இவைகளும் இன்னும் சில விஷயங்களும் முன்னதாகத் தெரிந்திருக்க வேண்டிய தவசியம்.

நன்னுதல்:—இது, நல் + நுதல், என்று பிரியும். நல் - நல்ல, நுதல் - நெற்றி. எனின், நல்நுதல் தன் ஆடல் விட்டு, என்றதற்கு இருக்கிறபடி பார்த்தால், நல்ல நெற்றி தன் விளையாட்டைவிட்டு என்றல்லவோ அர்த்தமாகும். அப்படி ஆகப்படாது. நெற்றியா விளையாட்டை விட்டுவிட்டது! ஆதலால் நல்நுதல், என்றதற்கு இங்கு, நல்ல நெற்றியை உடையவள், என்று சொல்லவேண்டும். செய்யுளில் அடிக்கடி இவ்விதம் உறுப்பு ஆபரணம் பூமாலை முதலியன, அவைகளை உடைய பெண்ணிற்குப் பதிலாய்ப் பயின்று வரக் காண்பீர். முன், 20 வது, செய்யுளில் (143-வது பக்கம்) இலங்கு இழை, என்றது, பிரகாசிக்கின்ற ஆபரணங்களை அணிந்த பெண்கள் என்றும், 22-வது செய்யுளில் (144-வது பக்கம்) வார் கோதை என்றது நீண்டமாலையை அணிந்தவள் என்றும், இந்நல்நுதல் என்பது போலவே வந்திருக்கின்றன. இப்படி வருகின்ற தொடர்களுக்கு அன்மொழித் தொகை, என்று பெயர். இந்தப் பேரை மாத்திரம் இப்பொழுது நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். இலக்கணத்தைப் பின்னொருவேளை பார்ப்போம்.

செம்மனத்தான் றண்ணளியான் செங்கோலான் மங்கையர்க
டம்மனத்தை வாங்குந் தடந்தோளான் மெய்ம்மை
நளனென்பான் மேனிலத்து நானிலத்து மிக்கா
னூளனென்பான் வேந்த னுனக்கு. 35

பதப்பிரிவு :—செம் மனத்தான் தண் அளியான் செம் கோலான் மங்கையர்கள்தம் மனத்தை வாங்கும் தட தோளான் மெய்ம்மை நளன் என்பான் மேல் நிலத்தும் நால் நிலத்தும் மிக்கான் உளன் என்பான் வேந்தன் உனக்கு.

பதவுரை.

செம் - செம்மையாகிய
மனத்தான் - மனதையுடையவன்,
தண் - குளிர்ந்த
அளியான் - கருணையை உடையவன்,
செம்கோலான் - செங்கோல் செலுத்துபவன்,
மங்கையர்கள்தம் - மாதர்களுடைய
மனத்தை - மனத்தினை
வாங்கும் - கவர்கின்ற
தட - விசாலமான
தோளான் - தோள்களையுடையவன்,
மெய்ம்மை - வாய்மையுடைய
நளன் - நளன்
என்பான் - என்று சொல்லப்படுபவன்

188989

மேல் - மேலேயிருக்கும்
நிலத்தும் - தேவலோகத்திலும்
நால் - நான்குவகையான
நிலத்தும் - (குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல்
என்ற) நிலப்பிரிவுகளையுடைய பூமியிலும்
மிக்கான் - சிறந்தவன் (ஒருவன்),
உனக்கு - உனக்கு
வேந்தன் - தலைவனாவதற்கு
உளன் - இருக்கின்றான்
என்பான் - என்று சொல்லும் பொருட்டு......
(இங்கு நாடினேன்.)

கருத்து:- இது அன்னத்தினுடைய வார்த்தை. முன் பாட்டிலே தமயந்தி, 'என் நாடல்' என்று கேட்டதற்கு இது உத்தரம். நளனை வர்ணித்து "இப்படிப்பட்ட ஒருவன் உனக்கு நாயகனாகத் தகுந்தவன் இருக்கின்றான் என்று சொல்லவே......" என்று அன்னம் வாக்கியத்தை முடிக்காமல் நிறுத்திவிட்டாலும், 'நான் இங்கே வந்தேன்' என்று முடித்துக் கொள்ளவும். 'நீ எதற்காக இங்கே வந்தாய்?' என்று ஒருவனைக்கேட்டால், அவன், "என் அண்ணனுக்கு நாளை விவாகம் என்று சொல்ல" என நிறுத்திவிடும் வழக்கமுண்டு. சொல்ல, என்னும் வினையெச்சம் கொண்டு முடிகிற வினைமுற்று 'வந்தேன்' என்பது கேள்வியை ஒட்டி மறைந்து நிற்கிறது. அப்படியே இங்கேயும், தமயந்தி 'என்நாடல்?' என்று வினவியதற்கு, 'இத்தகைய நாயகன் உனக்கு இருக்கின்றான் என்று சொல்லும் பொருட்டு'......என்று அன்னம் நிறுத்தியது. அல்லது, "உனக்கு நாயகன் ஆவதற்கு நான் இருக்கின்றேன்" என்று சொல்லிக் கொண்டிருப்பன், எனப் பொருள் கொள்வதும் சிறப்பாம்.

குறிப்பு:—1. இந்தப்பாட்டில் என்பான் என்னும் பதம் இரண்டு இடத்தில் வந்திருக்கின்றது. முதலில், 'நளன் என்பான்' என்றபோது நளன் என்னப்படுபவன், என்னும் அர்த்தத்தில் வந்திருக்கிறதென்பது சுலபமாய்த் தெரியும். ஆனால் 'உளன் என்பான்' என்ற மற்ற இடத்தில், என்பான் என்பது வினையெச்சம். உருவத்தில் அது வினைமுற்று மாதிரி இருக்கின்றது. ஆனால் அர்த்தத்தில் வினையெச்சம். உளன் என்ன வந்தேன், என்று ஆகும். என்ன என்பது செய்ய என்பதுபோல் ஒரு வினையெச்சமல்லவா! அவை, என செய என்றுகூட வருவதில்லையா! அப்படியே என்பான் செய்வான் பேசுவான் போன்ற உருவங்களும் சாதாரணமாய் வினைமுற்றாய் வந்தாலும் ஒவ்வொரு சமயங்களில் வினையெச்சமாகவும் வரும். ஒரே உருவத்தில் பதங்கள் வெவ்வேறு பொருளில் வருவதை முன் 46-வதுபக்கத்தில் காட்டியிருக்கின்றேன். இவன் நாளைக்கு என்னைக் காண்பான், என்ற வாக்கியத்தில், காண்பான் என்பது வினைமுற்று. இனி, 'நாளை என்னைக் காண்பான் வருவான்' என்றால், காண்பான் - காண, வினையெச்சம். பசு புல்மேய்வான் சென்றது. இங்குப் பசுவை மேய்வான் என்று சொல்லலாமோ எனக் கலங்காதீர். மேய்வான், வினையெச்சம், மேய அல்லது மேயும்பொருட்டு. வினையெச்சங்கள் மூன்று விதமான பொருள்களில் வரலாம் என்று முன்னே (46-வது பக்கம்) சொல்லியிருக்கிறேன். என்பான், செய்வான், உண்பான், போலப் பான் வான் என்று முடிகிற வினையெச்சங்கள் 'நெல் விளைவான் (விளைய) மழை பெய்தது' என்பதைப்போல் காரியப் பொருளில் வரும். அவைகளை விரித்தால், என்னும் பொருட்டு, செய்யும்பொருட்டு என்று விரியும்.

2. நால் நிலம்:—இந்தப் பூமிக்கு நால்நிலம் என்று பெயர் வந்ததன் காரணத்தை முன் ஓர் இடத்தில் கூறியிருக்கின்றோம். நால் நிலம், என்றவரையில் நாலுவிதமான நிலங்கள் என்றுதான் அர்த்தம். ஆனால் நாலுவிதமான நிலங்களையுடைய உலகம் என்று பொருள்படுவதால் நானிலம் என்ற தொடரும், இலங்கிழை வார்கோதை நன்னுதல் என்பனபோல், அன்மொழித் தொகை.

தினகர வெண்பா

நூற்பொருள் அகராதி

[எண் - செய்யுட்களின் எண்]

அ
அச்சுதேந்திரன் (குன்றை) 128
ஆ
ஆடுபல தேடலாம் ஆனையொன்று கூடாது 48
ஆரச்சுவர் 78
ஆரூரில் தேரூர்ந்தது 47
ஆவதறியாமை 60
இ
இடை நடுவு நிற்றல் 14
இமசேது 46
இராவணன் அழிந்தது 94
இலங்கை 133
ஈ
ஈசனைசெய்தமை 66
ஈன்றாள் பசி 69
ஈனர் கொடை 81
உ
உத்தசெயத்தியாகி 124
உத்தண்டன் 84
உதாரன் 117
உமாபதிக்கன்பு 2, 98, 113, 120
உலகத்தோடொழுகல் 88
உலவாருதல் 136
உளற்றுஞ் சிற்றறிவு 45
எ
எண் 43
எழுத்து 43
ஐ
ஐம்பத்தாறு தேசமுங் கொண்டாடும் குணம் 104
ஐவருக்குத்தூது 72
ஒ
ஒள்ளியர்கள் 41
க
கண் பார்வை 74
கருந்தமிழ் 75
கல்விக்கடல் 27
கற்றோர் சபை 44
காலங் கருதிக் கருமம் பதறாமை 52
கும்பகன்னன்நித்தத்துவம் கேட்டமை 68
குருவிகழுத்திற் பனங்காய் 55
குலமந்திரி 67
குலமன்னவர் 62
குன்றை 128
கெடிமன்னவர் 4
கொடை 37, 89, 115
கொய்யுலை 12
கொல்லாமற் கொல்லுதல் 35
கோவை 6, 7, 9, 16, 19, 30, 40, 41, 42, 55, 58, 59, 67, 69, 75, 84, 88, 91, 99, 102, 106, 109, 113, 118, 126, 129, 132, 134, 135.
ச
சங்கப் புதுமுத்தின் சங்கம் 122
சற்காரம் 24
சித்தசன் 102
சித்தர் 2
சித்தருணன் 9
சிமிழ் 31
சிவபூசை 36
சிவயோகி 113
சிற்றறிவாள் 35
சின்னம் 100
சீகருணன் 16, 118
சீதரன் 40
சீதள செந்தாமம் 122
சீமை 30, 42
சுந்தரன் 75
சும்மாதே 71
செங்கைமுகில் 125, 131
செங்கோலே செவ்வாழி, 10
செந்தமிழ் 8, 32, 106 134

செப்பு 31
செய்திப் பிழை 85
செல்வம் 15, 105
செல்வரிட்ட வேடம் 109
சேதுமட்டும்போற்றும் 48
சேரர்க்கிணையாம் 78
சேற்றுக் கமலம் 92
சைவநிலை 39
சோமன் சுட்டியீதல் 26
த
தமிழ் மணக்குந்தென்றல் 129
தமிழைத் தெள்ளிப் புனைதல் 32
தருமசீலன் 113
தவம் 6
தானைப் பெருமாள் 1
திக்குவிடப் போதல் 4
தியாக போகங்கள் 105
தியாகம் 25
திருப்பணி 132
தில்லைநடம் 62
தின்று கொழுத்தல் 61
தீர்க்க வயிரம் 18
தீவினை 23
தீனர் 25
துகிலுரிதல் 101
தெட்ட வொண்ணுமை 83
தெள்ளிமை 58
தென்கோவை 6, 99, 113
தென்னரதிகாரி 73
தென்னவுதாரன் 117
தென்னவலர் 121
தென்னிலங்கை வென்றமை 133
தேகி 111
தேசு 19, 37
தேர்த்திருநாள் 132
தேனு 115
தையலார் 77
தொண்டை நன்னாடு சான்றோருடைத்து 103
தோற்றுப் புறக்கவ்வுதல் 3
ந
நட்புக்கொண்டாய் 82
நரைவருதல் 38
நாகராகன் 118
நாகரிகர் 16
நாகரீகன் 24, 118
நாடகஞ்செய்சாலை 77
நாண்உயிரினுந்தக்கது 106
நினைந்தாற்போல் 30
ப
பண்டிதர் 99
பரத்தையர் 20
பவனி 127
பார்புரத்தல் 74
புண்ணியவான் 49
பெண்ணச்சு 7
பெண் புத்தி 95
பேதையர்க்கு மோகம் 41
ம
மங்கையர் வதனந் திங்கள் 116
மதன்செம்மனம் 137
மன்மதன் 135
மன்னர்க்குச் சீமைவளம் 42
மன்னவர்க்குத் திண்புத்தி கூறும் 95
மன்னவன் கண் 62
மாசுடையார் வாழ்வு 19
மாபாரதம் 98
மாலை பெறுதல் 123
மாவை யுத்தண்டன் 84
மைந்தர் 6, 8, 49
மைபார்த்த புன்பயிர் 108
வ
வண்டு மதுவுண் மாந்தருமொவ்வாமை 97
வள்ளுவர் 1
வளவர் 78
வாசவன் மெய் நூறுயிரம் பழுது 17
வாடினர் 28
விக்கிரமாதித்தனுக்குப் பட்டி அய்யிரு நூறாண்டு தெய்வமுடனீந்தது 65
விப்பிரர் 33
விரதமுட்டச் செல்லாமை 130
வீடணற்குத் தந்தோ மிலங்கையெனச் செப்பியது செய்தமை 70
வீமன் 97
வீரயன் பாலன் 113
வேலன் 113

கம்பராமாயணம்

ஆரணிய காண்டம்—4. ஜடாயுகாண் படலம்.

[197-வது பக்கத் தொடர்ச்சி]

பெருமையி னருமையை யெருவையுங் கருதும்.

மன்னவன் மாய்ந்தானெனக் கேட்டு மாழாந்து புலம்பிநைந்த வக் கழுகின் வேந்தன், "மெய்ந்நட்புக் கைவரப்பெறுமையால் யானின்னும் மடியாமற் கிடக்கின்றேனே" எனத் தற்பழி சுமத்திக்கொண்டு,

அலங்கார மெனவுலகுக் கமுதளிக்குந்
தனிக்குடையா யாழி சூழ்ந்த
நிலங்காவ லதுகிடக்க நிலையாத
நிலையுடையே னேய நெஞ்சின்
நலங்காண நடந்தனையோ நாயகனே
தீவினையே னண்பி னின்றம்
விலங்கானே னுகவினால் விலங்கினே
னின்னுமுயிர் விட்டி லேனால்

[அரசனே, உனக்கு அழகைத் தருவதற்காக இருப்பது போல் தோன்றினாலும் உண்மையில் உலகிற்கு அமிர்தத்தைக் கொடுக்கின்ற ஒப்பற்ற குடையை உடையவனே, நீ, கடல்சூழ்ந்த பூமியின் காவலையும் விட்டு, அலைகின்ற தன்மையை உடைய எனது அன்புள்ள மனத்தின் நன்மையைச் சோதித்தறியும் பொருட்டு இவ்வுலகம் விட்டுப் போயினையோ? தீவினையுடைய நான் விலங்கேயா யிருக்கின்றேன். ஆகையினால் மெய்ந்நட்பிற்குரிய இலக்கணத்தினின்றும் தவறினவனாகி இன்னமும் உயிர்விடாது இருக்கின்றேன்]

என ஏசறவு பூண்டுநின்ற இப்பாசுரம் சடாயுவின் மனத்துறை மாண்பிற் கிணையாய சொன்னயமும் வாய்ந்து மிகத் திகழ்கின்றது. 'திர்யக்' என்னும் வடசொல்லைத் தன்பொருட்டுக் காரணப்பெயராக்கித் தான் நட்பிற்குக்குறுக்காக நடக்கின்ற கொள்கையைக்கூறுமிது எருவையின் பரிவினை விரித்துரைக்கின்றது.

இன்னதோர் இளகிய தன்மையனாய அப்பெருந்தகைக்கழுகு தன்வரலாற்றினைத்தையும் தெரிவுறச்செப்பியபின்,

மருவினிய குணத்தவரை யிருசிறகா
லுறத்தழுவி மக்கா ணீரே
உரியகடன் வினையேற்கு முதவுவீ
ருடலிரண்டுக் குயிரொன் றானான்
பிரியவுந்தான் பிரியாதே யினிதிருக்கு
முடற்பொறையாம் பீழை பாரா
தெரியதனி னின்றேபுக் கிறவேனை
யித்துயர மறவே னென்றான்

[பொருந்துதற்கு அரிய குணங்களையுடைய இராமலக்மணர்களைத் தன் இரண்டு சிறகுகளாலும் நன்றாகத் தழுவிக்கொண்டு, "மைந்தர்காள், நீங்களே, கொடிய வினையுடைய எனக்கும் உத்தரகிரியைகளைச் செய்யுங்கள். இரண்டு உடல்களுக்கு ஓர் உயிர்போன்றவனாகிய தயரதன் பிரிந்து நீங்கவும், தான் நீங்காமல் இனிமையாக இருக்கின்ற என் உடற்பாரமாகிய துன்பத்தைப் பாராமல் இன்றைக்கே நெருப்பில்விழுந்து சாகேனானால் இந்தத் துயரத்தை இனித் தாங்கமாட்டேன்—என்றான்]

இவ்வண்ணம் உரைத்த அந்தப் புள்ளினத்தரசைக் கண்டு, மாண்டிறந்த தம் தந்தைத்தயரதனையே மீண்டுமிவண் பெற்றாரெனப் பரிவுகூர்ந்த கோமைந்தர் இருவரும் தம் கண்களினின்று முத்தம் முறைமுறையாயுக,

உய்வி டத்துத வற்குரி யானுந்தன்
மெய்வி டக்கரு தாதுவிண் ணேறினான்
இவ்வி டத்தினி லெம்பெரு மானெமைக்
கைவி டிற்பினை யார்களை கண்ணுளார்

[மற்றவர்களைக் காப்பாற்றவேண்டிய இடத்துத் தன்உயிரைக் கொடுத்து உதவுவதற் குரியவனாகிய தயரதனுந் தன் மெய்யினைவிடக் கருதாமல் விண்ணுலகம் சென்றடைந்தான். இப்பொழுது எம்பெருமானே, நீயும் எங்களைக் கைவிட்டுப் போனால் பிறகு எங்களுக்குப் பற்றுக்கோடாகத் துணைநிற்க வல்லவர் யாருளர்]

தாயி னீங்கருந் தந்தையிற் றண்ணகர்
வாயி னீங்கிவ னம்புகுந் தெய்திய
நோயி னீங்கினெ நுன்னினெ னெங்களை
நீயு நீங்குதி யோநெறி நீங்கலாய்

[நெறியினின்று விலகாதவனே, நாங்கள், பிரிவதற்கு அரிய, தாயைவிட்டும் தந்தையை விட்டும், குளிர்ந்த நகரின் வாயிலைவிட்டும், காட்டைச்சேர்ந்து அடைந்த வருத்தத்திலிருந்து உன்னைக் கண்டதால் நீங்கினோம்; நீயும் இனி, எங்களை விட்டுப் பிரிவாயோ—என்ன]

என வேண்டிக்கொண்டனர். இவ் வேண்டுகோளால் இவர் முடித்த கருமங்கள் இரண்டு. சடாயு அச்சமயம் உயிர்நீங்காமை தடுத்தவொன்று வெளிப்படை. மற்றது ஊன்றி நோக்குவோர்க்கே உணரவரும். முன்னும் பின்னும் முகந்துகொண்ட முழுமையோடல்லால் வழங்குகின்ற வாசகங்கள் கம்பரிற் காண்பதரிது. "விலங்கானேன் ஆகலினால் விலங்கினேன்" எனத்தயரதன் மாண்டபின்னும் தான் மாயாத தன்மையை நெறிநின்று நீங்கியதா யுரைத்த சடாயுவை மறுத்து "அற்றன்று, எமக்குக் களைகண்ணாகவே நீ யுயிர்வைத்திருந்தாய், ஆதலின் நீ உனக்குரிய நெறிநின்று விலங்கினையல்லை. நீ யிப்பொழுது உயிர்நீத்தாற்றான் நெறியை விட்டு நீங்கினவனாவாய். எனவே, அது செய்யாய் நீ என்ற நிச்சயம் எமக்குளது" என்னு மவ்வளவு கருத்தையும் உட்கொண்டே இராமலக்மணர், "நெறி நீங்கலாய்" எனக் குறிப்பித்து முடிக்கின்றனர். இதுவுமன்றி இன்னுமொன்றுளது. சம்பரனைத் தடிந்தவந்நாள் 'நீஉயிர் நானுடல் என இயம்பிய தயரதன்தன் சொல்கிடக்க அவ்வுணர்விழுந்த கூற்றுவனர் உடலைக்கொண் டேகுமதோ" என்றென்று இனைந்து பழித்த கழுகின் வேந்தனுக்கு, "நமன்தா னோர் நவையிலன்" எனச் சாதிக்க நினைத்தார்போல் மன்னன் மைந்தர்,

உய்வி டத்துத வற்குரி யானுந்தன்
மெய்வி டக்கரு தாதுவிண் ணேறினன்

எனச் சாற்றமிது, சிலேடையுடைய கம்பர் செம்மையுடைய குரிசிலர்க்குச் செய்தளிக்கும் சால்பினால் சிறப்பு மிக உடையதாகின்றது. "மறலியின் திறமையொன்றும் எம் மன்னவன்பால் செல்லாதுகாண். உயிரென்றும்உடலென்றுங் கூறிட்டுத் தயரதனைக் கொண்டேகும் ஆற்றல் கூற்றுவற்குச் சிறிதுமில்லை" என்று காட்டி, "உயிர்கிடக்க உடலை விசும்பு ஏற்றினர் உணர்விறந்த கூற்றினர்" என்றவச் சடாயுவின் மொழிகளை மறுப்பதற்கே, "ஏற்றினர்" என்ற அப் பிறவினையை இங்கு "ஏறினன்" எனத் தன்வினையாக மைந்தர்கள் மாற்றிய தாதல்வேண்டும். மற்று, 'உயிர்கிடக்க உடல் ஏறியது என்' என்றாலோ, அதுவும் நெறிபிறழ்ந்த விபரிதமன்றென்று நிறுவுவார்போல், வாய்மை உடல் எனும் இருபொருளுடையவம் மேய் என்னும் சொன்னயத்தினால் 'தயரதனே, மெய்விடக் கருதாது விண்ணேறினன்' என்ன இராகவன் வகுத்தனன். மற்றவர் உய்வதற் குற்றவிடத்துத் தன்னுயிரை வழங்குதற்கு உரியானாதலின், தனக்குரியது தன்னொரு மெய்யே எனக் கருதி அதனை விடுதற்கிசையாது விண்ணேறினன்எனப்பகர்வதாலும் இவ்விரு அடிகளின் பொருள் மிகவுஞ் சிறக்கின்றது.

இப்படிவேண்டினர் இரகுகுல வீரர்என்றால் யாரே உயிர்நீத் தகலத்துணிவார். ஆதலின் ஜடாயுவும், "ஆயின், ஐயன்மீர், நீங்கள் அயோத்தி மீண்டபின் நான் என்னுருயிர் நண்பன் தயரதனைச் சென்று சேர்வேன்" என உறுதிகூறினன். கூறி,

வேந்தன் விண்ணடைந் தானெனின் வீரர்நீ
ரேந்து ஞால மினிதளி யாதிவட்
போந்த தென்னை புகுந்தவென் புந்திபோய்க்
காந்து கின்றது கட்டுரை யீரென்றான்

[அரசன் மேலுலகம் அடைந்தானென்றால், வீரர்களே நீங்கள் தாங்கவேண்டிய உலகினை இனிதுகாக்காமல், இங்கு வந்தது என்ன காரணம்? என்ன இடையூறு நேர்ந்தது? என் மனம் பலவாறு எண்ணி வேகின்றது. விளக்கிச் சொல்லுங்கள்—என்றான்]

என்ற தோடமையாது மீண்டுமவ்வரசினைக் குமரர்தாம் அடைவதற்கு உற்ற உதவியும் புரிவனென உறுதியும் புலப்பட,

தேவர் தானவர் திண்டிற னாகர்வே
றேவ ராக விடரிழைத் தாரெனிற்
பூவ ராவு பொலங்கறை வேலினீர்
சாவ ராக்கித் தருவென ரசென்றான்

[சித்திரவேலை யமைந்ததும் கூர்மை செய்யப்பட்டதுமாகிய அழகிய இரத்தக்கறைபடிந்த வேற்படையையுடையவர்களே! தேவர்களாயினும் அசுரர்களாயினும் நாகர்களாயினும் வேறு எவரேயாயினும், உங்களுக்கு இடர் செய்திருப்பாராயின், அவர்களைச் சாகின்றவர்களாக்கி உங்களுக்கு அரசினை மீட்டித்தருவேன்—என்றான்]

இவ்வரலாற்றில் தன் சிற்றவை கைகேசியின் செய்கையுஞ் செய்தியும் அதிகம் அடங்கி யிருக்கின்றன. தன்னால் விளைந்த தன்மையை அம்மாதரார் முன்னர் வசிட்டனுக்குத்தானே எடுத்துச்சொல்லத் துணிந்தனளாயினும், பிறர் பிழை பேசற்குக் கூசிய பெருந்தகை இராகவன், மெய்ம்மைக்கிணங்க அதனை மறைப்பதற்கும்இயலாதாதலின், 'தன்னாவின் தெரிவுறச் செப்புதற்கிசையானாகி, என்செய்தா னெனின்—ஏன்; ஆர்வமுடன் இதனை அறைதற்கொரு தருணம் பார்த்திருக்கும் தம்பிதா னருகிருக்கத் தயங்குவானேன்! ஆதலின்,

தாதை கூறலுந் தம்பியை நோக்கினன்
சீதை கேள்வன வனுந்தன் சிற்றவை
மாத ரால்வந்த செய்கை வரம்பிலா
ஓத வேலை யொழிவின் றுணர்த்தினன்

[தந்தைக்கு நிகராகிய ஜடாயு அவ்வாறு கூறலும், சீதைக்கு நாயகனாகிய இராமன் தன் தம்பி இலக்குமணனைக்குறிப்பாய்ப் பார்த்தருளினன். அவனும், தன் சிறியதாயாகிய ஒரு பெண்ணால் விளைந்த காரியங்களை, அலைகளையுடைய கடலைப்போல் ஓய்வென்பதில்லாமல் தெரியக் கூறினன்.]

கைகேசியின் கதையைச் சொல்லென்று ஏவிவிட்டால் பிறகு, ஓதக் கடல்தான் ஓயுமெனினும், இவ்விளைய காகுத்தன் எவ்வண்ண மொருமுடிவு காண்பான்! பெண்ணொட்ட மொட்டேன் இனிப் பாரிடத்தில்" என்றிவன் பூட்டிய பகழியை முன் இராகவன் நெகிழ்த்திவிட்டானாயினும், உற்ற குறை உரைத்தாற்றீரு மியற்கைக்கிணங்கச் சிற்றவை மாதரால் வந்த செய்கையை இலக்குவன்தான்வரம்பிலாதியம்பலாயது யாதும் வியப்பில்லையே. தனக்கென முனியாப் பிறர்க்கெனச் சீறும் பெருமகன் அவ் விலக்குவன்றன் நாவின்வளர்ச்சிக்குத் தக்கதோர் கூற்றே யிதுவெனினுங் காரணமின்றி யது கூறப்பெற்றதுமன்று. இஃதிங்ஙனம் கைகேசி இழைத்த இடரெலாம் பலபடப் பகர்வதாயமைந்திலதேல், "எம்பெருமானன்" எனவிரும்பித் தயரதன் மைந்தர்களால் அழைப்பதற்குரியனாயின்ற

எருவைவேந்தன்றன் பெருமை வெளிப்படுவ தெங்ஙனம்? "நுந்தமக் கிடரிழைத்தோ ரேவரேயாயினுஞ் சாவராக்கித் தருவேன், இயம்புதிர்" என, கட்டுரை கேளாமுன்னம் தானுரைத்த நெடுவஞ்சினத்தை இப்பொழுதப் பேதைக் கைகேசியின்பால் செலுத்தப் புக்கனனோ என்னில், அல்லன்: கருங்கடற் கடுவினுங் கொடியதோர் இடர்இராமனுக்கிழைத்தனள் கேகயன் மடந்தை. முன்னுரைத்த மொழிப்படியே ஜடாயு அவள்மீதுபொங்கியசீற்றத்தனாய்ப் பதைத்தெழுந்தவளைச் சாவளாக்குமுன் நாவந்தவரையில் வைதொழிக்கத் துவக்கியிருத்தல் வேண்டும். "நீ யுயிர் யானே உடல்" எனத் தயரதனால் புகழ்ந்தேற்றுக் கொள்ளுதற்குரியவனா யிவ்வெருவையரசு அமைந்திரானேல், மற்றெல்லோரையும்போல் அம் மாதினைப் பழிக்கவே புக்கிருப்பான். இதுவோ சிறியோர் முறை. ஒருவருக் கொருவர் இடர் இழைத்தக்கால், அவ்விடரிற்கு ஆளாகியவர் உயர்ந்தோராயின் அவ்விடரினால் இழந்த வெல்லாங் கழிந்தேக, பின்னர்த்தாம், அனலிற்படு பொன்னே போல், உத்தமகுணங்களால் பொலிந்து தோன்றுவார். ஆதலின் ஏதிலார் செய்த தீங்கும் இவர் சிறப்பிற்கே சான்றாகி முடியும். எனின், உயர்பெருங் குணத் துத்தமர்கள், இத்தகையதோர் சரித்திரத்தைக் கேட்குங் காலையில், இடர்ப்பட்டார் பெருமையில், இடர் செய்தார் கொடுமையை முற்றிலும் மறந்துவிடுவார். சிறியன சிந்தியாதார்க்கு ஈதன்றோ குணம். ஜடாயு மிகப் பெரியவன். ஆகலின், கைகேசி யோர் மாகயத்தியாய்க் காண்பதின்றி, பாராவரும் புவிக்கெலாம் வேதமேயனைய இராமன், அவள்செய்த வஞ்சனையிற் றன்மேன்மைவிடாது ஒழுகிய விழுப்பத்தினாற்றானே இதயம் முழுவதுங் கவரப்பெற்றான். முன்னிவன் வாய்வந்த வஞ்சினம் மாய்ந்துபோயிற்று. கூனுஞ் சிறிய கோத்தாயுங் கொடுமையிழைப்ப, அதனை மாற்றும் ஆற்றலிருந்தும்அது செய்யாமல், சிற்றவைக்குத் தோற்றுச்செல்லவே இசைந்து காடும் மலையுங் கடந்து தன்முன் வந்து நின்ற மைந்தன் பெருமையின் அருமைக்கே உளங் கரைந்து,

உந்தை யுண்மைய னாக்கியுன் சிற்றவை
தந்த சொல்லைத் தலைக்கொண்டு தாரணி
வந்த தம்பிக் குதவிய வள்ளலே
யெந்தை வல்லதி யாவர்வல் லாரெனா

[உன் தந்தையை வாய்மையாளனாக்கி, உன் சிறியதாய் சொன்ன சொல்லைத் தலைமேற்கொண்டு, உன்னைத் தேடிக் கானகம்வந்த தம்பி பரதனுக்குப் பூமியைக் கொடுத்துவிட்ட வள்ளலே, என்னப்பா, நீசெய்த இதுபோல் செய்யவல்லவர் வேறு யாரே உளர்—என்று]

அல்லித் தாமரைக் கண்ணனை யன்புறப்
புல்லி மோந்து பொழிந்தகண் ணீரினன்
வல்லை மைந்தவம் மன்னையு மென்னையு
மெல்லை யில்புக ழெய்துவித் தாயென்றான்

இதழ்களையுடைய செந்தாமரை போன்ற கண்களையுடைய இராமனை அன்புடன் தழுவிக்கொண்டு, உச்சிமோந்து, ஆனந்தக் கண்ணீர் சொரிந்தவனாய், "மைந்த, நீயேவல்லவன், தயரதமன்னனையும் என்னையும் அளவிலாக் கீர்த்தி அடையும்படி செய்தாய்]

என்று இராமனைப் பாராட்டி உவப்பதிற்றானே ஜடாயு தீர்ந்துவிட்டான். 'சாவராக்குவென்' என்று ஜடாயு சொல்லியதை நம்பிச் சிற்றவை மாதரால் வந்த செய்கையை வரம்பிலாதோதிய இலக்குவனை இப்பொழுது அருகிருந்து தம் மனக் கண்களால் பார்க்கவல்ல பாக்கியம் செய்துள்ளவர், அவன் பொன்முகம் நாணத்தால் வெள்ளியென விளர்க்கக்கண்டு பரிவுமிக்க மனத்தினராய், இராமனைத் தழுவிய ஜடாயுவென்னத் தாமும் இவ்விளவலை வாரியணைத்து, "இலக்குவ, அழியல்; நின் முன்னவன்பால் வைத்த நேயத்தால் நிரம்பிய ஊக்கமொடு இதனை நீ நிகழ்த்தினாய். இவ்வறிவு உனக்கு உறுவிக்கவே, அவ்வன்புடைய கள்வன் இராமன் ஒருகா[illegible] வரலாற்றைத் தானுரைக்காது நிற்கொண்டு சொ[illegible] தான்போலும். அறிவின தாழம் உடையவனவ[illegible]

உணர்வின் மேன்மையால் நீ யுயர்கின்றாய். மற்று நீ மாழாந்து உன்பொன்னொளி மாய்க்கற்க" எனத்தேற்றி அவன் நெற்றிமுற்றும் முத்தங்களிட்டு மொய்த்திருப்பார்.

இளையகோவின் கலக்கத்தினைச் சடாயுவுங் கண்டிருத்தல் வேண்டும். எனின், இலக்குவன் சிந்தனையை வேறுவழி செலுத்த நினைத்து,

பின்ன ரும்மப் பெரியவன் பெய்வளை
அன்ன மன்ன வணங்கினை நோக்கினன்
மன்னர் மன்னவன் மைந்தவிவ் வாணுதல்
இன்ன ளென்ன வியம்புதி யாலென்றான்

[மறுபடியும், அப்பெருந்தகையாகிய ஜடாயு, வளையல்கள் அணிந்த அன்னம்போன்ற சீதையை நோக்கி, "சக்ரவர்த்தி மைந்தனே, இவ் வொளிபொருந்திய நெற்றியுடையவள் யாவள் என்று சொல்வாய்—என்றான்]

இதனிற் குவந்திணங்கிய இலக்குவன், கோசிகனுடன் போந்து தாடகையை அழித்து வேள்விகாத்தது முதல் சிவபிரான் வில்லை யிறுத்துச் சீதையை இராகவன் மணங்கொண்ட செய்திகள் யாவையுந் தெரியக் கூறுதலும்,

கேட்டு வந்தனன் கேழ்கிளர் மௌலியான்
தோட்ட லங்கலி னீர்துறந் தீர்வள
நாட்டி னீவிரு நன்னுத லாளுமிக்
காட்டில் வைகுதிர் காக்குவென் யானென்றான்

[ஒளி விளங்கும் முடியை உடைய அச் சடாயு, அதனைக் கேட்டு மகிழ்ந்தவனாய், பூவிதழுடைய மாலையை அணிந்தவர்களே, வளநாட்டைவிட்டு நீங்கிய நீங்களும் அழகிய நெற்றியையுடைய இச்சீதையும் இக்காட்டில் தங்கியிருங்கள், யான் காப்பேன், என்றான்]

ஆயினும், அகத்தியர் குறித்த உறையுளிற்கே தாங்கள் செல்லநினைத்ததை இராமன் இயம்பலும்,

பெரிது நன்றப் பெருந்துறை வைகிநீர்
புரிதிர் மாதவம் போதுமின் யானது
தெரிவு றுத்துவெ னென்றவர் திண்சிறை
விரிவு நீழலிற் செல்லவிண் சென்றனன்

[அந்தப்பெருமை பொருந்திய இடம், மிகவும் நல்லதே. நீங்கள் அங்குத் தங்கிச் சிறந்த தவத்தைச் செய்யுங்கள்; வாருங்கள்; நா னவ்விடத்தினைத் தெரியக் காட்டுவேன், என்று சொல்லி, அவ் விராமலக்ஷ்மணர்களும் சீதையும் தனது வலிய சிறகுகளின் பரந்த நிழலில் வரும்படி ஆகாய மார்க்கத்திலே பறந்துபோனான்]

போய் அவ்வயின் ஓர் சோலையை இனிது சென்று எய்துதலும்,

வார்ப்பொற் கொங்கை மருகியை மக்களை
யோர்ப்பச் சிந்தனை யிட்டவ் வரக்கர்தஞ்
சீர்ப்பைச் சிக்கறத் தேறினன் சேக்கையிற்
பார்ப்பைப் பார்க்கும் பறவையிற் பார்க்கின்றான்

[அங்குள்ள அரக்கர்களின் வன்மைகளை ஐயமின்றி அறிந்தஅச்சடாயு, தக்கபடி யோசித்து, வாரணிந்த அழகியகொங்கையையுடைய தன் மருமகளாகிய சீதையையும், புத்திரர்களாகிய இராம இலக்குமணர்களையும், கூட்டிலுள்ள குஞ்சுகளைப் பாதுகாக்கின்ற பறவையைப்போலப் பாதுகாத்து வருபவனாயினன்]

இம்மக்கள் அயோத்திமீண்டபின் தான் விண்ணூடு சென்று தன் னுயிர்நண்பனும் தயரதனைச் சேர இருந்த, பாவம் இவ்வண்ணற் கழுகு, அன்னதற்கு முன்னரே, புரியுங்காவலில் தன் னின்னுயிரையும் அவர்களுக் குரியதாக்கிய கொள்கை சாலப்பெரியதே.

கழுகிற்கேனும் பெருமையே கற்பிக்கின்ற கம்பராம் நம் கவியரசின் வண்மைக்கிணங்கிய மனத்தராயமையோமெனின், உயர்ந்தோர் சரித்திரங்களினும் தாழ்மையே காண்கின்ற புந்தியராய்த் தீர்ந்தவராவோம். இதற்குதாரணமாக, "புதுமை" என்னும் பத்திரிகையில், ஸ்ரீமான் அய்யாமுத்து என்னுமொருவர் அரிச்[illegible] தான் கற்றதை ஊக்கமுடன் [illegible] அவ்வழி நினைத்தொழுக [illegible]வேண்டும் என்னும் [illegible] வரைந்துள கட்டுரை

யொன்றை இங்கு எடுத்தெழுதுதல் தக்கதெனத் தோன்றுகின்றது. கூறுகின்றுரவர்:—

உலகத்தில் தோன்றிய மக்கள்கூட்டத்தில் ஹரிச்சந்திரன் சத்திய சன்மார்க்க நெறியில் உயர்ந்தவன் எனக் கூறப்படுகிறது. ஹரிச்சந்திரன் சத்யம் தவருத அரசனெனவும், அவனது சத்யத்தைச் சோதித்து நிரூபித்துக் காட்டுவதாக ஒரு ரிஷி சபதம் செய்தாரெனவும், அதன் பயனுக அவர் ஹரிச்சந்திரனை யணுகி வேள்வியின் நிமித்தம் திரண்ட திரவியம் கேட்டாரெனவும், ஹரிச்சந்திரன் ரிஷியவர்கள் கேட்டபோது தங்கு தடையின்றித் திரவியம் தருவதாக வாக்களித்ததாகவும், பின்னர் ஹரிச்சந்திரன் வேட்டைக்குச் சென்றவிடத்தில் அவன் கொன்று வீழ்த்திய மான் தமதெனவும்,மோகித்து விரும்பிய கன்னிகைகளை அவன் சுகியாது விறட்டியது பிசகெனவும் ரிஷி கூறி அவனைக் கடிந்தாரெனவும், அப்போது ஹரிச்சந்திரன்தனது தேசத்தைத் தாரைவார்க்கவொப்பினும் தன் மனைவியல்லாத பிற பெண்களை ஒருபோதும் விரும்பேனெனக் கூறினனெனவும், அதுகேட்ட ரிஷி "உனது தேசத்தை எனக்குத் தாரைவார்த்துக் கொடு" எனக் கேட்டதாகவும், ஹரிச்சந்திரன் அதன்படி யீந்ததாகவும் பின்னர் ரிஷி "நீ முன்னர் வாக்களித்த பொருள் தா" வெனக்கேட்க ஹரிச்சந்திரன் இல்லையென்று கூருது தன்னையும், தன் மனைவி மகனையும் விற்றுக் கடன்கட்டித் தனது வாக்கை நிறைவேற்றியதாகவும், எனவே அவன் சத்தியவான் என்ற புராணக்கூற்றை எல்லோரு மறிவர்.

ஒரு அரசன் "தனது" பொக்கிஷத்திலிருக்கும் திரவியத்தைக் குடிகளுக்குச் சொந்தமானதெனவே மதிக்க வேண்டும். பொக்கிஷத்தின் பணத்தைக் குடிகளே நிரப்புகிருர்கள். எனவே அப்பணம் குடிகளுடைய நன்மைக்கான காரியங்களிலே செலவழிக்கப்படவேண்டும். குடிகள் தரும் பணத்தைக் குடிகளுடைய க்ஷேமத்திற்கே செலவிடவேண்டுவது சத்தியவந்தர்களான அரசர்களின் மறுக்கொணுத நெறியாகும். அவ்வாறிருக்கத் தனது பொக்கிஷத் திரவியங்களை காட்டில் அலைந்து திரியும் ஒரு சந்நியாசிக்கு வேள்வியின் பொருட்டுத் தருவதாக ஹரிச்சந்திரன் வாக்களித்தது சத்தியம், சன்மார்க்கம், நியாயம், அரசநெறியாகிய சகல நெறிகளுக்கும் முரணுனதாகும்.

"அரசனே நாட்டுக்கும், நாட்டுப் பொருளுக்கும் உரியவன். அவன் எதேச் சாதிகாரமாய்த் தனதிஷ்டப்படி எதுவும் செய்யலாம்" என்பதே வேதவாக்காக விருந்தால் காட்டிலுள்ள விலங்கினங்களைச் சூறையாடுவதில் அரசனுக்குள்ள உரிமையில் ஒரு ரிஷி சீற்றங்கொள்வானேன்? அதைக் கேட்டு ஹரிச்சந்திரனும் கலங்குவானேன்? மற்றும் தனது முடியைத் தன் காலால் உதைத்தெறிந்த அம் முனிவனைத் தனது சத்துருவென மதித்துச் சம்ஹாரம் செய்யாமல் பணிந்து கெஞ்சுவானேன்? துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலனம் செய்வதே அரச நெறியென்றுல் ஹரிச்சந்திரன் விஸ்வாமித்திரனை ஒரே வெட்டில் வீழ்த்தியிருக்க வேண்டுமல்லவா?

தன்னை விரும்பி வரும் மாதருடைய காமவிச்சைக் கிசைவதினும் தனது தேசத்தைப் பிறர்க்குத் தாரை வார்த்துக் கொடுப்பது மேலென ஹரிச்சந்திரன் வாயிலிருந்து வந்துவிட்டதாம். "அப்படியாகுல் கொடு" வென விஸ்வாமித்திரர் கேட்டதும் ஹரிச்சந்திரன் கொடுத்துவிட்டானும்! தேசம் என்பது "உயிரற்ற சடப்பொருளா?" அதற்குத் தன்னுணர்ச்சி யில்லையா ? ஹரிச்சந்திரனுடைய தேசத்தில் வாழ்ந்தவர்களெல்லாம் விலங்கினங்களா? அவர்கட்குச்சுதந்திரம், சுயமரியாதை யொன்றுமில்லையா? முற்றுந்துறந்த முனிவனுக்குத் தேச பரிபாலனம் எதற்கு? விஸ்வாமித்திரன் அரசாள அருகதை யுடையவனு? அவனது அரசைக் குடிகள் விரும்புவார்களா ? என்பனவொன்றையும் சிந்தியாது ஹரிச்சந்திரன் "தாரை வார்த்துக்" கொடுத்தது யோக்யமான காரியமா? விவேகமற்ற தன்மையில் முன் பின் யோசனையின்றிக் கூறுவதும், பின்னர் அது விவேகமற்ற தன்மையில் கூறப்பட்டதென உணர்ந்தும், சிறிதுகூட யோசியாமல் நிறைவேற்றுவதுதானு அரச நெறி? அரச நெறிக்கு முரணுக நடக்கும் ஒரு அரசனைச் சத்யவந்தனென்று எப்படிக் கொள்ள முடியும் ?

தேசத்தைத் தாரைவார்க்கு முன்னரே முனிவன் வேள்விப்பணம் கேட்பான் என்று ஹரிச்சந்திரன் "சத்யவந்த" னுதலால் யோசிக்கவில்லை போலும். ஆனுல் கபடத்தனமான முனிவன் "உன் தேசத்தைக் கொடுத்தாய் விட்டது, நீ முன்னர் வாக்களித்த வேள்விப் பணம் கொடு" என்று கேட்டதும், ஹரிச்சந்திரன் விவேகமுடையவனுயிருந்தால் "அரச பொக்கிஷம் தேசத்தின் ஒரு பகுதியாகும். அப்பகுதியை முன்னரே உனக்கு வாக்களித் திருந்தேன். இன்று தேச முழுவதையும் உனக்கு வாக்களித்தாய் விட்டது. எனது வாக்குப்படியே நீ கேட்டதெல்லாம் கொடுத்தாய் விட்டதே? பின்னரேன் இம்மோசடி?" எனக் கேட்டு நிராகரித்திருக்க வேண்டும். மூடமதிகொண்ட ஹரிச்சந்திரனுக்கு முனிவனின் மோசக் கருத்தை உணரச் சக்தியற்றுப் போயிற்று. ஆண்மை யென்பது ஒரு சிறிதுமற்ற ஹரிச்சந்திரனுக்கு முனிவனுடைய வஞ்சகச் செயலை எதிர்த்துப் போராடச் சக்தியில்லை. பகுத்தறிவு சூன்யனுன அரசன் "சத்ய வந்தன்" எனப் பெயரெடுக்க ஆவல் கொண்டு சகல தர்மங்களுக்கும் எதிராக நடந்துகொண்டிருக்கிறுன்.

ஹரிச்சந்திரனிடத்திலே அவனுடைய குடிபடைகளுக்கு அபார விஸ்வாச மிருந்திருக்க வேண்டுமல்லவா ? தேவர்களும் ஹரிச்சந்திரன் சத்தியந் தவருதிருந்ததைக் கண்டு பெருமையும், பொருமையும் பூண்டனர்களென்றுல், குடிகள் ஹரிச்சந்திரனை கௌரவிக்காமலிருந்திருக்க முடியுமா ? முனிவனுடைய வேள்விக் "கடனைக்" கொடுக்க முடியாமல் அரசன் திகைக்கும்போது குடிகள் என் சகாயம் செய்ய முன்வரவில்லை ?

ஹரிச்சந்திரன் தனது கடனைக் கொடுக்க அவனதுமனைவியாகிய சந்திரமதியை விற்றதாகக் கூறப்படுகிறது. என்ன மோசம்? என்ன வஞ்சகம்? இது நியாயமா? முறையா? ஹரிச்சந்திர நீதியைப் பெண்கள் விரும்புவார்களா? முட்டாள் தனமாகப் பொருள் கொடுப்பதாகச் சொல்லி, தேசத்தையே கொடுத்துவிட்டு, பின்னர் அம் மூடமொழியை நிறைவேற்றுவதில் சகல நீதிகளுக்கும் முரணுன முறையில் தனதுமனைவியை விற்கலாகுமா? மனைவி யென்பவள் விலைமாற்றுப் பண்டமா? அவ்விதம் விலைக்கு வாங்கிய அடிமைப் பொருளை அதனுடைய எஜமானன் எத்தகைய காரியங்களுக்கும் உபயோகிக்கலாமே? மனைவியை விற்பது தானே சத்யவந்தர் செயல்.

புராணங்கள் பொய்யும், புளுகும் ஆபாசங்களும்,காரண காரியத்துக் கொவ்வாத நியாயங்களும், இயற்கைக்கு முரணுன அற்புதச் செயல்களும் நிறைந்தனவாய், மக்களிடத்தில் மூட பக்தி, மூட நம்பிக்கை, மூடக் கொள்கை, உயர்வு, தாழ்வு, விதி—புனர்ஜென்மமாகியவற்றை வளரச்செய்து கேடு விளைவித்து வருகின்றன. புராணங்களை அவைபோதிக்கும் நீதிக்கேனும் படிக்கலாமென்றுல், அவை நெறியில்லா நெறிகளையே போதிக்கின்றன. ஒவ்வொரு புராணமும் ஒவ்வொரு வஞ்சகரின் சுயநலத்திற்கு ஆக்கந்தேடவே வரையப்பட்டதென்பதற்கு ஹரிச்சந்தி புராணம் ஒன்றே சான்ருகும். ஹரிச்சந்திச புராணம் போதிக்கும் நீதிதா னென்ன ?

சொன்ன சொல் தவறக்கூடாது, பொய் பேசக்கூடாது என்பன மேல்பூச்சாக விருந்தாலும் அக்கதையின் ஆழ்ந்த கருத்தென்ன? "கடன்பட்டால் விற்காததை விற்றுகிலும் கொடுத்துவிடவேண்டும்" என்பதே ஹரிச்சந்திர புராணத்தின் முக்கிய நீதியாகும். உண்மையில் ஹரிச்சந்திரன் கடன்படாதிருந்தும் வாயால் சொன்ன கடனைத் திருப்பிக் கொடுக்கத் தன்னையும், தன்மனைவி மக்களையும் அடிமைகளாக்கிச் சுடலை காத்தான். சத்யநெறி அதுவாயிருக்க உண்மையில் கைதனிற் கடன் பெறுவோர் என்ன கஷ்டத்திற்குள்ளாயினும் திருப்பிக்கொடுத்துவிட வேண்டுமல்லவா?

இதுவே ஹரிச்சந்திர புராணம் போதிக்கும் நீதி. கடன் கொடுப்போர் பணக்காரர். கடன் படுவோர் ஏழைகள். கடன் பட்டோர் எக் கஷ்டப் பட்டாயினும் மாங்கல்யந் தரித்த மனைவியை விற்றுகிலும் கடன் கட்டிவிட்டால் அவர்கட்கு மோட்சம் சித்திக்குமென்று எடுத்துக்காட்டப் பணக்காரரால் கற்பித்து எழுதப்பட்ட புராணம் ஹரிச்சந்திர புராணமாகும். இப்புராணத்தைப் பணவடிமைகளான பண்டிதர்கள் கவி பாடுகிருர்கள். பாகவதர்கள் காலட்சேபம் செய்கிருர்கள். நடிகர்கள் நாடக

மேடையில் நடித்துக் காட்டுகிருர்கள். சென்னை ஒத்தைவாடைத் தியேட்டரில் இன்றிரவு "மயானகாண்டம்." ராஜாகோவிந்தசாமி ஹரிச்சந்திரனுக நடிப்பார் என்ற விளம்பரம் போட்டவுடன் கொட்டகையில் எள்விழ இடமின்றித் திரள் கூடிவிடுகிறது. சினிமா கம்பெனியார் லட்சக்கணக்கான ரூபாய் செலவுசெய்து "ஹரிச்சந்திரா" நடத்திக் காண்பிக்கிருர்கள். கடன்பட்ட கபோதிகள் தாங்கள் பட்ட கடனைத் திருப்பிக் கொடுக்க ஹரிச்சந்திரனேடு போட்டி போடுகிருர்கள். எல்லோரும் ஹரிச்சந்திரனுக்கு எதிர்வீட்டுக்காரனுக ஆசைப்படுகிருர்கள். பணக்காரருக்கு ஆக்கமுண்டாக்கும் ஹரிச்சந்திரனுடைய வாக்கின் திறம் நாடெங்கும் நாடோறும் பிரசித்தப்பட்டு வருவதில் ஆச்சரிய மொன்றுமில்லை. கடன் தருவோர் கடன்படுவோர்என்ற மக்களின் நிலைமைமாறிப் பொருளுமில்லை கடனுமில்லை என்ற பொதுவுடைமைத் திருநாள் ஸ்தாபிதமாகும்முதல்நாள் ஹரிச்சந்திர புராணத்தை மக்கள் தீயிட்டுக் கொளுத்துவர். அந்நாள் என்நாளோவென ஏங்குதல் ஒழிக. அந்நந்நாள் அதிவிரைவில் நெருங்கிக்கொண்டிருக்கிறது.

இக்கட்டுரை, தன்னுடைய தன்மையைக் கைகேசியைப்போல் தானே தெரியக்காட்டி நிற்கின்ற தாதலின் இதன்மீது யாதும் விளம்பல் மிகை.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

கவனிக்க "சத்வைத்யசாலை" நஞ்சன்கூடு ஏமாறாதீர்

குழந்தைகளுக்கு :

ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோஜனை மாத்திரை
சித்ர தைலம்,

"பால சுதா" (Reg.)

அமிர்தாமலகதைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்

டானிக்குகள்:

சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்

ஜீவஸுதா (Reg.)

பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து 16 நாட்களுக்கு ரூ. 2-0-0.

பண்டிட் ஸோல் ஏஜண்டு: கன்ஸர்ன், மதுரை.

டிப்போ: பம்பாய். கல்கத்தா

"நஞ்சன்கூடு பல்பொடி"
சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) டபி,மெடிகேடட் டப்பி

பிராஞ்சு: மதுரை. காஞ்சீபுரம்

TOPICS OF THE DAY
Order Your Copy

Gandhiji in England
And The Proceedings of The Second R.T.C.
Re. 1-8-0

The book begins from the Truce and contains a complete and comprehensive account of the Mahatmaji's voyage to England as the accredited Ambassador of India; his wonderful reception at various places, the addresses presented to him and his replies thereto; together with an account of the Proceedings of the 2nd R. T. C., verbatim reports of the speeches of the Mahatmaji, the Prime Minister Mr. Macdonald, Lord Sankey and other important pronouncements made by the other members of the Conference including the final statement of the Premier both at the R. T. C. and the House of Commons and the magnificent support of Lord Irwin in the Lords' Debate; his visit to the King and various other activities in England and the Continent bringing the story up to his return and landing at Bombay. A book of surpassing interest and useful addition to the history of the World.

Life of Barrister Savarkar
BY
CHITRA GUPTA

The story of the life of this famous patriot written by a close friend is packed with thrilling incidents, of how as a Leader of the revolutionist party he led the movement in India and in England, how he was arrested and his dramatic escape at Marseilles by jumping out through the port-hole of the ship. A book of enchanting interest and full of interesting lessons to our New India. **Re. 1-8**

Those, who like to know something of V. D. Savarkar's views, will do well to read his own books, for example:—

		Rs.	A.
1.	Hindutva	1	4
2.	An Echo from the Andamans. ...	1	0
3.	Hindu-Pad-Padashahi: or a critical Review of the Hindu Empire of Maharashtra. By Vinayak Damodar Savarkar with an introduction by Dr. R. C. Majumdar, M.A., Ph.D., Dacca	3	0

B. G. PAUL & Co.,
Publishers
12, Francis Joseph Street, MADRAS.

:: தமிழ்ச் சட்ட புஸ்தகங்கள் ::

	ரூ.	அ.
ஸ்டாம்பு, ரெஜிஸ்டர் பலவித பத்திரங்கள் எழுதும் மாதிரியுடன் விவகார சிந்தாமணி	2	8
உயில், பாகம், வார்சு பாத்தியம் ஸ்திரீதன முதலியதுள்ள பெரிய ஹிந்து லா	2	0
சிவில் விவகாரம் பூர்த்தியாயடங்கிய சிவில் லா	3	0
போலீஸ்மாஜிஸ்டிரேட் சம்பந்தமான கிரிமினல்லா	3	0
விவாக வயது சட்டம்	1	0
புது கிராம முனிசிப் சட்டம்	1	8
கிராம சுகாதாரம்	0	2
கிராம பஞ்சாயத்துகோர்ட் ஆகட்	1	4
லோகல் போர்ட் பஞ்சாயத்து ஆக்ட்	1	8
குற்ற சம்பந்தமான இந்தியன் பினல் கோட்	3	0
ஹிந்து தர்ம ஸ்தாபன சட்டம்	1	0
டிரஸ்டி ஆக்ட்	0	10
பரம்பரை கிராம உத்தியோக ஆக்ட்	1	0
புது இன்கம்டாக்ஸ் சட்டம்	1	0
பெரிய மகமதிய லா	2	0
எஸ்டேட் ஜமீன்குடி நிலச் சட்டம்	1	0

வெளி நாட்டுக்கு முன் பணம் இல்லாமல் ஆர்டர் கவனிக்கப்படமாட்டாது.

V. S. T. SAWMY & Co., Vepery, Madras.

கலாநிலயம் 1930-வது வருடம் 3-வது வால்யூம்.

தலையங்கங்கள்:—அறியாமை வேண்டப்படும் 4. சுயநலச் சோதனை 8. விஷயத்திற்கேற்ற விளம்பரம். முயலுக்கு முயலவேண்டா. விளம்பினால் வெட்கக்கேடு. கல்லாதவர்களை நல்லவர்கள் 3. நாணத்தால் நைவார் திறம். வாலின் நீளம். பெருமையின் பெருமை...முதலிய கட்டுரைகள் ஐம்பது. உலகியலோடு வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குவன.

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) அயோத்தியா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர் வேதவியாசர் முதலானோர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25-கட்டுரைகளில் விளக்கப்பட்டுளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வரைந்துள, "தசரதன் குறையும் கைகேசி நிறையும்" என்னும் நூலிற்கூறிய பொருளும் முடிவும் கம்பருடைய கருத்திற் கொவ்வாதன வென்று 25-கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கின்றது.

குறுந்தொகை:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) புத்தகமாய் இப்பொழுது கிடைக்காத இச் சங்கநூற் செய்யுள் நானூறும் விளக்கமான உரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

அப்பர்:—(E. N தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் அறுபத்துநான்கு கலைகளையறிந்து கையாண்ட பெருமை விளக்கப்பெற்றிருக்கின்றது.

இலஞ்சிப்பாவை:—(T. S. நடராஜபிள்ளை, B. A. B. L.) Sir Walter Scott என்பவர் ஆங்கிலத்தில் பாடிய Lady of the Lake என்னும் காவியத்தைத் தழுவி எழுதிய கதை.

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A., B. L.) ஆங்கிலமுறையைத் தழுவி, நடத்தை, உணவு நாட்டம், அழுகை, சிரிப்பு, தன்னெடுப்பு, தன்னொடுக்கம், புணர்ச்சி, இணைவிழைச்சி, விளையாட்டு முதலியவைகளின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

தமிழ்ப் பாடம்:—வில்லிபாரதம் கிருஷ்ணன் தூதுச் சருக்கமும், அஷ்டப்பிரபந்தமும் போதிப்பதுடன், புணரிலக்கணம் முழுவதும் தெற்றென விளக்கப்பெற்றிருக்கின்றது.

நம்மாழ்வார் வைபவம்:—K. இராஜகோபாலா சாரியார், B. A. B. L.) விளக்கமான ஆராய்ச்சியுடன், 2-ம்பத்து 6-ம் தசகம் வரையிலும்.

இவைகளைத் தவிர, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கட்டுரைகளும், ஆச்சரிய சூடாமணி என்னும் வடமொழி நாடக மொழிபெயர்ப்பும், சிலப்பதிகாரக் கானல்வரியை அழகுற விளக்கிய 'மாதவி மாதவம்' என்னும் கட்டுரைகளும், தனிப்பாடல்களும், அண்டபுராண ஹாஸ்யப் பாடல்களும், நாயன்மார் சரித்திர உண்மைபோன்றபல கட்டுரைகளும் நிறைந்துள.

1931-வது வருடம் 4-வது வால்யூம்.

தலையங்கம்:—அகமே புறம், வாழ்வாங்கு வாழ்பவர் 10. உண்மையில் உழல்வார் திறம் 5. மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ 4. அருமையினும் அருமை 4 மறப்பது முறையாமோ. நள்ளார் நகை 4. முதலிய கட்டுரைகள் 50.

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) கைகேசி சூழ்வினைப் படலம் முதல் அயோத்தியாகாண்டம் இறுதியாக 50 கட்டுரைகளில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

சூளாமணி:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) இதுகாறும் உரை யெழுதப்பெறாத இந்நூல், உரையுடன் பதிப்பிக்க ஆரம்பமாகி இவ்வாண்டில் ஐந்நூறு செய்யுள்கள் வந்துள.

யாப்பிலக்கணம்:—உறுப்பியலும், செய்யுளியலில் பாக்களின் இலக்கணமும்.

அப்பர்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் 64 கலைகளைக் கையாண்ட பெருமை விரிவாக வரையப்பட்டிருக்கின்றது.

ஆண்டாள்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) ஆண்டாள் பிறப்பு, இளமை, கல்வித்திறம், அநுபவம், யௌவனம், மதம், சித்தாந்தம், முத்தி முதலியவைகளின் உண்மை

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம், M. A. B. L.) புலன்களின் அமைப்பும், உணர்வு முதலியவைகளின் தத்துவமும் விளக்கப்பெற்றுள.

பிலாரோ நாடகம்:—ஆங்கிலப்புலவர் R.B. Sheridan எழுதிய நாடக மொழிபெயர்ப்பு.

நவராத்திரி நாடகம்:—(K. N. சுந்தரேசன், B. A. Hons) ஓர் நவீன நாடகம்.

சிதம்பரதேவர் சரிதம்:—(Dr. V. S. அருணாசலம் பிள்ளை) முத்தியில் மனம் வைத்து உலகத்தில் விவகரிப்பார் பெருமையை உட்கொண்ட வோர் நாவல்.

களவியற் காரிகை:—(S வையாபுரிப்பிள்ளை, B. A. B. L.) இதுகாறும் அச்சேறாத நூல். அகப்பொருளிலக்கணத்தின் சிறப்பை விளக்கவல்லது.

கந்தபுராணமும் சங்க நூல்களும்:—(பண்டிதர், திம்மப்பா ஐயர்) கந்தபுராணத்தைச் சங்கநூல்களோடு ஒப்புநோக்கி ஆராயும் கட்டுரைகள்.

இவை தவிர, மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், தமிழிரட்டையர், முதலிய கட்டுரைகள் பல.

ஒவ்வொரு வால்யூமிற்கும் விலை வருமாறு:— பைண்ட் செய்யாதது ரூ. 7 8 0
காலிகோ கில்ட் பைண்ட் ரூ. 8 8 0 ஆப்லெதர் கில்ட் பைண்ட் ரூ. 9 0 0

இவ்விலையில் தபால் அல்லது இரயில் சார்ஜ் அடங்கவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் இரயில்வே பார்ஸல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். To Pay போட்டு அனுப்புவோம். எழெட்டெணக்களுக்கு மேல் இரயில்வே கட்டணம் ஆகாது. பர்மா, ஸிலோன் இவ்விரண்டு இடங்களுக்கும் ரயிலில் அனுப்பமுடியாதாகையால் விலையுடன் தபால் பார்ஸல் சார்ஜ் ரூ. 2—4—0 சேர்த்தனுப்பவேண்டும். மலேயே, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளில் இருப்பவர் தபால் சார்ஜிக்கு ரூ 3. சேர்த்தனுப்பவேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயலாது. முன்பணம் அனுப்பி எழுதல் வேண்டும்.

வர்த்தமானம்

அரசியல் அமைப்பாலும் செல்வ நிலையாலும் முன்னேற்றமடைந்த அமெரிக்காவிலுள்ள நியூயார்க்நகரில் ஒரு பகல் எங்கும்கேட்கப்பெற்ற ஒருபெரிய அரவம் யாதென்றறிய மெத்தைகளின்மீதும், வீட்டின் கூரைகளின்மீதும் ஜனங்கள் ஏறி வானத்தைநோக்கினராம். அப்பொழுது 1000 அடி உயரத்தில் ஒருஆகாயவிமானம் நகரைச்சுற்றிப் பறந்ததாம். அந்த விமானத்தில் இருந்தவர், லௌட்ஸ்பீக்கர்என்னும்கருவியின் துணைகொண்டு 'வேலையில்லாது ஏராளமான ஜனங்கள் திண்டாடுகின்றனர். அவர்களுக்கு உணவும் உடையும் கொடுத்து உதவுங்கள்; பழயஉடை யுடையவர்கள் அவைகளை எடுத்துக்கொண்டு போலீஸ் ஸ்டேஷன் இருக்குமிடங்கள் தோறும் சென்று அங்குக் குழுமியிருக்கும், எளியவர்களுக்கு உதவுங்கள்' என்று சொல்லினராம்.—அமெரிக்காவின் முன்னேற்றநிலை யிது.

***

நியூயார்க் நகரிலுள்ள கர்னல் சால்ஸலின் பேக் என்னும் செல்வரின் 19 மாதக் குழந்தை களவாடப்பெற்றது. ஒருநாள் குழந்தையைத் தூங்க வைத்துவிட்டுத் தாதி யுண்ணச்சென்ற சமயம் குழந்தை களவாடப்பெற்றுளது. குழந்தை காணாதுபோகவே அவ்வீட்டார் இச்செய்தியை அமெரிக்காவிலுள்ள எல்லாப் போலீஸ் ஸ்டேஷனுக்கும் அறிவித்தனர். மோட்டார் போகும் பாதைகளிலும், விமானங்கள் போகும்பாதைகளிலும் போலீசார் காவல்புரிந்தனர். ஆனால் குழந்தையைத் திருடினவன் அகப்படவில்லை. சில மணி நேரத்திற்கெல்லாம், குழந்தையின் தகப்பனுக்கு ஒரு டெலிபோன் செய்திவந்தது. குழந்தை சுகமே இருக்கின்றதென்றும், குழந்தை ஒரு குறைவு மில்லாமல் பாதுகாக்கப்படுமென்றும் 50000 டாலர் கொடுத்தால் குழந்தை திரும்பக் கொடுக்கப்படுமென்றும் அச்செய்தி கூறியது. குழந்தையின் ஆகாரம் இதுவென்றும்குழந்தை இன்னவிதம் வளர்க்கப்படவேண்டுமென்றும் குழந்தையின் தாய் அமெரிக்கப் பத்திரிகையில் விளம்பரம் செய்துள்ளாள். குழந்தையைத் திரும்பவும் கொடுத்தால் திருடனைக் காட்டிக்கொடுக்கவில்லை என்றும், திருடனுக்கு எவ்விதத் தீங்கும் ஏற்படாதென்றும் குழந்தையின் தந்தை விளம்பரம் செய்துள்ளார். குழந்தையை இழந்த பெற்றோர்க்கு உலகத்தின் பல பாகங்களிலிருந்தும் அநுதாபச் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றனவாம்.

***

வங்காளத்தில் ஸ்டீவன்ஸ் என்ற ஐரோப்பியரைச் சுட்ட பெண்ணின் தந்தை அரசாங்கத்தில் உத்தியோகம் வகித்தவர். அவருக்கு அளிக்கப்பெற்ற பென்ஷன் ரூபாய் 400 அரசாங்கத்தாரால்நிறுத்தப்பட்டது, என்று வங்காளச் செய்தி கூறுகின்றது.

***

கடந்த சில மாதங்களாக நடந்த சீன ஜப்பானிய யுத்தம் சர்வதேச சங்கத்தார் முயற்சியினால் இப்பொழுது நின்றுளது. இருநாட்டிற்கும் சமாதனம் ஏற்படும்படியான முயற்சி நடைபெற்று வருகின்றது. எனினும் இருநாட்டாரும் படைகளை அப்புறப்படுத்தவில்லையாதலால் சிறுசிறு சண்டைகள் ஏற்படலாகின்றன, என்று அயல்நாட்டுச் செய்தி கூறுகின்றது.

***

இலங்கை இரயில்வேயின் வருமானம் குறைவடைந்து வருகின்றது. 1930-வது வருட வருமானத்தைக் காட்டிலும் 1931-இல் 4326304 ரூபாய் வருமானத்தில் குறைந்துளது. எனவே இலங்கை இரயில்வே அதிகாரிகள் செலவைக் குறைக்க ஏற்பாடு செய்துவருகின்றனர். இரயில்வே குமாஸ்தாக்களில் பலர் நீக்கப்படலாம். பொதுவாய் இரயில்வே உத்யோகஸ்தர் சம்பளம் குறைக்கப்படும். இரயில்வண்டிகளை இங்கிலாந்திலிருந்து வாங்குவது செலவுடையதாய் இருப்பதால் வண்டிகளை இங்கேயே செய்துகொள்ள ஏற்பாடு நடந்துவருகின்றது. வேலையாளர் வேலைநேரமும் இனி அதிகமாகும் என்று இலங்கைச்செய்தி கூறுகின்றது.

***

சுகாதார இலாக்காதார் வெளியீடு வருமாறு:—ஒவ்வொருவரும் தங்கள் வீடுகளில் தொத்து வியாதிகள் புகாது பார்த்துக்கொள்வார்களாயின் ஜனங்களை வருத்தும் பாதி நோய் அகன்றுவிடும். ஒரு வீட்டில் நோயாளியிருந்தால் அவர் இருக்கும் அறை சுத்தமாய் இருக்கவேண்டும். அதற்கு அருகாமையிலுள்ள விடமும் சுத்தமாயிருக்கவேண்டும். நோய்க் கிருமிகளைக் கொல்ல, குளோரைட் லைம் (Chloride of Lime) என்னும் மருந்து ஒவ்வொரு வீட்டிலும் இருக்கவேண்டியது அவசியம். ஒரு காலன் ஜலத்தில் அரை ராத்தல் மருந்தைக் கொட்டி அந்த ஜலத்தால் நோயாளி அறையைச் சுத்தம் செய்யவேண்டும். நோயாளி அறையில் ஈக்கள் புகாது பார்த்துக்கொள்ள வேண்டும். நோயாளிக்கு உதவிசெய்யும் வேலையிலிருப்பவர் இந்த நீரில் தமது கைகளைச் சுத்தம் செய்துகொள்ளவேண்டும்.

***

கோவை ஜில்லாவைச் சேர்ந்த கோபிசெட்டிபாளையத்திலுள்ள பொன்வேலை செய்யும் நாகப்ப ஆசாரி என்பார் கிராமபோன் சவுண்டு பாக்ஸ் ஒன்று தானே புதிதாய்ச் செய்திருக்கின்றனராம். இது சீமையிலிருந்துவரும் ஸௌண்டு பாக்ஸைவிட நல்லசப்தமுடையதாயிருக்கின்றதாம். இப்பொழுது சீமை ஸௌண்டு பாக்ஸ் ரூ. 5 முதல் 25 வரை விற்கப்படுகின்றது. நாகப்பாசாரியார் பித்தளையில் செய்த ஸௌண்டு பாக்ஸின் விலை அடக்கம் அணா 8. பலர் இதைப் பரிக்ஷித்துப் பார்த்து மெச்சியிருக்கின்றார்களாம்.

***

பெல்ஜியம் நாட்டு வித்தகர் ஒருவர் தமது அறிவை, விசாலப்படுத்திக்கொள்வதற் கென்று தமது ஊரை விட்டு யாத்திரைசெய்து வருகின்றனராம். அவர் பெல்ஜியத்தைவிட்டுப் புறப்பட்டு 23 வருடங்கள் ஆகின்றன. இவர் ஐரோப்பா, இங்கிலாந்து, அமெரிக்கா கனடா ஆஸ்திரேலியாமுதலியவிடங்கள் சென்று இப்பொழுது ஆசியாவில் பிரயாணம் செய்து கொண்டிருக்கின்றார். இவர் ஒவ்வொரு நாட்டிலும் சிற்சில வருடங்கள் தங்கி அவ்வவ் நாட்டுப் பாஷைகளைக்கற்றுவருகின்றனராம். இப்பொழுது இலங்கையில் இருக்கின்றனராம்.

KALANILAYAM.
REG. NO. M, 2324.

—:வைத்திய ரத்ன:—
பண்டிட். D.கோபாலாசார்லு அவர்களின்
ESTD 1898
"ஜீவாமிருதம்"

பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, மறதி, அயர்வு, வீர்யக்குறைவு, இவைகளைப் போக்கி, தேகபலம், ஞாபகசக்தி, வீர்யவிர்த்தி, இவைகளை அளிப்பதில் இணையற்றது.
எல்லா இடங்களிலும் கிடைக்கும். விலை ரூ 3-4-0
ஆயுர்வேதாஸ்ரமம்
தபாற் பெட்டி. 287. மதருஸ்.
கேட்லாக் இனும்

அகராதிகள்.

தமிழ்ச்சொல் அகராதி (3 பாகம்) ரூ. 18—0—0
காரநேஷன் அகராதி (தமிழ்-தமிழ்-ஆங்கிலம்) 10—0—0
தமிழ்-தமிழ்-ஆங்கிலம் வி. விச்வநாத பிள்ளை இயற்றியது 676 பக்கங்கள் கொண்டது. ஒவ்வொரு சொல்லுக்கும் நேரான தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்பும் கொண்டது. 6—0—0

கலா நிலயம்,
புரசைவாக்கம், சென்னை.

1930-வது வால்யூம்

பயிண்டு செய்தும் செய்யாமலும் கிடைக்கும். சில பிரதிகளே இருக்கின்றன. வேண்டுவோர் சீக்கிரத்தில் பெறல் நலம்.

குறுந்தொகை என்னும் சிறந்த சங்கநூல் உரையுடனும், விசேடக் குறிப்புகளுடனும் இவ்விதழ்களில் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றன.

விலை உள்நாடு		விலை வெளிநாடு
,, 9-0-0	அரைலெதர் பயிண்டு	,, 10-8-0
,, 8-8-0	காலிகோ	,, 10-0-0
,, 7-8-0	(பயிண்டு செய்யாதது)	9-0-0

ரயிலில் அனுப்பப் புத்தகமொன்றிற்கு 6 அணா ஆகும். தபாலில் அனுப்பவேண்டுமானால் உள்நாடுகளுக்கு ரூ. 2, வெளிநாடுகளுக்கு ரூ. 3 விலையுடன் சேர்த்து அனுப்பவேண்டும்.

கலா நிலயம்,
புரசை, சென்னை.

வித்வான் த. சண்முகக் கவிராயரின்
:: மகா பாரதம் தமிழ் வசனம் ::
திருத்தமான உயர்ந்த பதிப்பு
இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்கு அச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.
(1) ஆதிபர்வம் ரூ. 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வங் அடங்கியது ரூ. 5. மற்ற பர்வம் அச்சில்.
பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை,
வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்

எற்படுத்தியது] நாஷனல் [1906
இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.
ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்ஸ், 7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.
1906-ம் வருஷத்தில் ஏற்படுத்தப்பட்டது.
ஸ்டாக்குகளிலும், பாண்டுகளிலும் அவ்வப்பொழுது ஏற்படும் மாறுதல்களில்லாது லைப் இன்ஷூரன்ஸ் நிரந்தர சேமிப்பாக விருக்கின்றது.
பிள்ளையின் கல்விச் சேமிப்பு வயோதிகச் சேமிப்பு
பெண்ணின் வரதக்ஷிணை குடும்பச் சேமிப்பு
இவைகளுக்கு இன்ஷியூர் செய்யுங்கள்.
குறைந்த விகிதப் பிரிமியங்கள்—தாராள நிபந்தனைகளை இந்தியரால் மட்டும் நிர்வகிக்கப்பட்டுவரும் வலிமை பெற்ற கம்பெனி
மொத்த ஆஸ்தி ... ரூ. 1,72,00,060-க்குமேல்
செலுத்தப்பட்டுள்ள உரிமைகளின் மொத்தம் ,, 86,00,00
திருப்திகரமான வீதப்படி போனஸ் வெளியிடப்படுகின்றது.
ஏஜன்ஸி நிபந்தனைகளுக் கெழுதுவது உங்களுக்கு லாபகரமானது.
T. அனந்தாச்சாரி, B. A. பிராஞ்சு காரியதரிசி,
113, அரமனைக்காரத்தெரு, ஜார்ஜ டவுன், மதராஸ்.
R. G. தாஸ் & கம்பெனி, மானேஜர்கள்

நெருப்பு, இதர விபத்துகள் சம்பந்தமானவற்றை நாஷனல் நெருப்பு & ஜெனரல் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்டார் கவனித்து வருகின்றனர்.
ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்., 7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.
டி. அனந்தாச்சாரி, பி. ஏ., பிராஞ்சு காரியதரிசி,
113, அரமனைக்காரத்தெரு, ஜார்ஜ் டவுன், மதராஸ்
ஆர். ஜி. தாஸ் & கம்பெனி, மானேஜர்கள்.

— திருக்குறள் —
மூலமும் சொற்குறிப் பகராதியும்
விஷய ஒப்புக்குறளும்
(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)
சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துளது மாணுக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.
விலை அணா 12. வி. பி. செலவு வேறு.
கலாநிலயம், புரசை, சென்னை.

அலங்காரம்—அழகு—ஸ்நானம்
இவைகளுக்கு எங்கள்
:: மணித் தைலம் ::
மிகச் சிறந்தது. ஆயுர்வேத முறைப்படி தயார்செய்யப்பட்டது. 50 வருஷங்களாகப் புகழுடன் உலாவிவருகிறது. தலைமயிரை உதிராமற் தடுத்து நீளமாக வளரச் செய்யும். முகத்திலுண்டாகும் வடுக்களையும் பருக்களையும் நீக்கும். உஷ்ணத்தைச் சமனஞ்செய்யும்.
5 துலாம் தைலம் கொண்ட புட்டி 1-க்கு ரூ. 1
5 புட்டிகள் விலை ரூ. 4
ஆரோக்கிய கிரந்தம் இனும்!
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)

188989